REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 பெப்ரவரி 26 திங்கட்கிழமை
# தினகரன்
THINAKARAN
තිනකරන්
வரு. 92 இல. 49 | Monday 26, February, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## தாமதத்துக்கு தொழிற்சங்க நடவடிக்கை காரணமல்ல

**மன்னிப்பு கோரியது ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்**



கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ், நடத்தப்படும் சோதனை கருமபீடங்களில் தாமதம் ஏற்பட்டதற்கு தற்காலிக, திட்டமிடப்படாத செயற்பாட்டு நிலைமைகளே

06

## ரஷ்ய, உக்ரைன் பயணிகளை வெளியேறச் சொன்னது யார்?

**உடனடி விசாரணைக்கு ஜனாதிபதி பணிப்பு**



ரஷ்ய, உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் 14 நாட்களுக்குள் நாட்டை விட்டு வெளியேற வேண்டுமென வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பில் விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சரவையின் முன் அனுமதியின்றி இவ்வாறு வெளியிடப்பட்ட அறிவித்தல் தொடர்பிலேயே ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

06

## GCE A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான தொழிற் பயிற்சிகள் மார்ச் 05 இல் ஆரம்பம்



கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான தொழிற் பயிற்சிகள் மார்ச் மாதம் 05 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

இவ்வருடம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் ஆங்கில மொழி வழிகாட்டல் மற்றும் தாம் விரும்பும் தொழில்சார் பாடத்தை இதன் மூலம் இலவசமாகக் கற்க முடியும் எனவும், நாடு முழுவதிலும் உள்ள 300 மத்திய

06

## கச்சதீவு புனித அந்தோனியார் திருவிழா தமிழகத்திலிருந்து எவரும் வரவில்லை

**சுமார் 5,200 க்கும் மேற்பட்ட இலங்கையர் பங்கேற்பு**



**கச்சதீவிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம், சாதிக் ஷிஹான்**

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் உறவுப் பாலமாக திகழும் கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தலத்தின் வருடாந்த திருவிழா நேற்று முன்தினம் (24)

06

# ஒரு இலட்சம் மாணவர்களுக்கு வருடாந்தம் புலமைப்பரிசில்கள்

**ஜனாதிபதியின் பணிப்பில் ரூபா 3,600 மில்லியன் ஒதுக்கீடு**

**10,126 பாடசாலைகளை உள்ளடக்கி "ஜனாதிபதி கல்வி புலமைப்பரிசில் 2024/2025" என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த 'ஜனாதிபதி நிதியம்' தீர்மானம்**




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில், பாடசாலை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு ஊக்குவிப்புகளை வழங்கும் நோக்கில் "ஜனாதிபதி கல்வி புலமைப் பரிசில் 2024/2025" திட்டம் ஒன்றை ஜனாதிபதி நிதியம் நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.

இதன்படி, நாட்டிலுள்ள 10,126 பாடசாலைகளையும் உள்ளடக்கிய வகையில், தரம் 01 முதல் தரம் 11 வரை கல்வி கற்கும் ஒரு இலட்சம் (1,00,000) மாணவர்களுக்கு, வருடாந்தம் இந்நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இத்திட்டத்துக்கு 3,600 மில்லியன் ரூபாவை ஜனாதிபதி நிதியம் ஒதுக்கியுள்ளது.

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையை கருத்திற்கொண்டு, குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களிலுள்ள மாணவர்கள் எதிர்நோக்கும் பாடசாலை உபகரணங்கள், பயிற்சி புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளல் போன்ற விடயங்களில் நிலவும் சிரமங்களுக்கு ஓரளவு நிவாரணம் வழங்குவதே இத் திட்டத்தின்

06

## ஹம்பாந்தோட்டை துறைமுகப் பிரதேசம் பொருளாதார மையமாக கட்டியெழுப்பப்படும்

**இதன் அவசியம் குறித்து ஜனாதிபதி சுட்டிக்காட்டு**



ஹம்பாந்தோட்டை பிரதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிக்காக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுள்ள பாரிய முதலீடுகளை, தேசிய பொருளாதாரத்துக்கு நன்மை பயக்கும் வகையில் தொடர்ச்சியாக பயன்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

06



03 **ஐக்கிய குடியரசு முன்னணியின் முன்மொழிவு ஜனாதிபதியிடம் கையளிப்பு**

## இலங்கையர் இருவரை நாடு கடத்தியது சீனா

சீனாவில் கைது செய்யப்பட்ட இரண்டு இலங்கைத் தமிழரை சீனா, நாடு கடத்தியுள்ளது. இவர்கள் இருவரும் கடந்த (24) அதிகாலை கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

கொள்கலன் ஒன்றில் மறைந்திருந்து மலேஷியாவுக்கு தப்பிச் செல்ல முயன்றபோதே இவ்விருவரும் கைதாகினர்.

கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கப்பலில் ஏற்றப்பட்டிருந்த வெற்று கொள்கலன் ஒன்றில் மறைந்திருந்த இவர்கள், இருவரும் மலேஷியாவுக்கு

06

'புதிய கூட்டணி' ஒரு திட்டத்துடனே செல்கிறது

## ஜே.வி.பி, ஐ.ம.சவுக்கு நாட்டை கட்டியெழுப்பும் திட்டம் இல்லை

**மார்ச் மாதம் மிகப் பெரிய கூட்டணி உருவாகும்**



ஜே.வி.பிக்கும் ஐ.ம.சவுக்கும் நாட்டைக் கட்டியெழுப்பும் திட்டம் கிடையாது. நாட்டு மக்களுக்கு உண்மை, சத்தியம், யதார்த்தத்தை எடுத்துக் காட்ட எமது புதிய கூட்டணி தயாராகவே உள்ளது. நாட்டின் அரசியல் வரலாற்றை மாற்றியவாறு மார்ச் மாதத்தில் மிகப்பெரிய கூட்டணியை உருவாக்குவோம். புதிய கூட்டணி ஒரு திட்டத்துடனேயே

06

இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை

## இந்திய உயர்ஸ்தானிகருடன் அமைச்சர் டக்ளஸ் அவசர பேச்சு



இந்திய மீனவர்களின் அத்துமீறல் காரணமாக கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்கக் கோரி, தமிழகத்தில் போராட்டம் நடத்தப்படும் இச்சந்தர்ப்பத்தில் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்குமிடையே நேற்று மாலை விசேட பேச்சுவார்த்தையொன்று இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இத்தசந்திப்பு நடைபெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

06

## பலாலி உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இந்து ஆலயங்களுக்கு செல்ல அனுமதி

**07 கோயில்களிலும் வாராந்த பூஜைகளுக்கும் ஏற்பாடு**



யாழ். பலாலி உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 07 இந்து கோயில்களுக்கு வாராந்தம் பொதுமக்கள் செல்வதற்கு யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகம் ஏற்பாடு செய்துள்ளது.

யாழ். பாதுகாப்பு படைத் தலைமையகத்தைச் சூழவுள்ள அதியுயர் பாதுகாப்பு வலயத்தினுள் அமைந்துள்ள 07 இந்துக் கோயில்களில், நித்திய நைமித்திய பூஜைகள் மற்றும்

06

## குளத்தில் டிராக்டர் விழுந்து விபத்து: 08 குழந்தைகள் உட்பட 24 பேர் பலி

**இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் சோகம்**



இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் குளத்தில் உழவு இயந்திரம் (டிராக்டர்) தவறி விழுந்து விபத்துக்குள்ளானதில் 08 குழந்தைகள்

06

## 2023 இல் சுமார் 10 இலட்சம் மின் இணைப்புகள் துண்டிப்பு

**தவணைமுறையில் செலுத்த பரிந்துரை**

நாடளாவிய ரீதியில் 2023ஆம் ஆண்டில் 10,69,000 மின் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தெரிவித்துள்ளார்.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை குறைப்பதற்கான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட, துண்டிக்கப்பட்ட இணைப்புகளுக்கு மீள் இணைப்பை வழங்குவதற்கு கட்டணத்தை 50 சதவீதம் குறைப்பதோடு, நிலுவைக் கட்டண தொகையை தவணையாக செலுத்த அனுமதிக்குமாறு துறைசார் அதிகாரிகளுக்கு வலியுறுத்தியுள்ளார்.

06

## மாணவர்களை இலக்கு வைக்கும் போதைவஸ்து வியாபாரிகளை கைது செய்வதே எமது இலக்கு

**யுக்திய நடவடிக்கை நோக்கமும் இதுவே**



தவறு செய்யும் நபர்களிடமிருந்து பாடசாலை மாணவர்களை காப்பாற்றும் நடவடிக்கையாகவே எமது விசேட யுக்திய சுற்றிவளைப்பு அமைந்துள்ளது. பாடசாலை மாணவர்களை இலக்கு வைத்து பாடசாலைகள் மற்றும் அதனை அண்டியுள்ள

06

குருநாகல் போதனா வைத்தியசாலை

## குருதி டயாலிசிஸ் சிகிச்சை பிரிவை ஆய்வுக்குட்படுத்த விசேட குழு விரைவு



குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிறுநீரக நோயாளர்களுக்கான டயாலிசிஸ் சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர், திடீரென உயிரிழந்தமைக்கு சிகிச்சைக்காக வழங்கப்பட்ட இரசாயனத்தின் தாக்கமே காரணம் என தற்போது சந்தேகிக்கப்படுகிறது.

ஒரு வார காலத்துக்குள் குருநாகல் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நோயாளர் ஐவர் உயிரிழந்ததையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை (23) வைத்தியசாலையின் டயாலிசிஸ் பிரிவுக்கு சீல் வைத்து தற்காலிகமாக மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இதன் பின்னணியிலுள்ள காரணத்தை கண்டறிய

06

## நாட்டில் 04 பொலிஸ் பிரிவுகளில் பெண் உட்பட 04 சடலங்கள் மீட்பு



இரத்தினபுரி, குருவிட்ட, கொழும்பு பேலியகொடை, சிலாபம் மாரவில மற்றும் ராகமை பகுதிகளில் அடையாளம் காணப்படாத ஒரு பெண் உட்பட 04 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குருவிட்ட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பின்வல பகுதியில் கங்கையில் நிர்வாணமாக காணப்பட்ட சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது . 35 முதல் 40 வயதுக்கிடைப்பட்ட ஆண் ஒருவருடைய சடலமே மீட்கப்பட்டுள்ளது. இச்சடலம் யாருடையதென இதுவரை அடையாளம்

06





கண்டி முஸ்லிம் வர்த்தக சங்கத்தின் 30 ஆவது வருட ஆண்டு நிறைவு விழா த கிரேண்ட் கண்டியன் ஹோட்டலில் தலைவர் எம். எச் சலீம் டீன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்து கொண்டார். கௌரவ அதிதியாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே கலந்து கொண்டார். விசேட விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் எம். எச். ஏ. ஹலீம், ரவூப் ஹக்கீம் ஆகியோர்களுடன் பாக்கிஸ்தான் உயர் ஸ்தானிகராலயத்தின் இராண்டாம் செயலாளர், பாகிஸ்தான் நாட்டின் வதிவிடப் பிரதிநிதி அப்சல் மரைக்கார். சிங்கள தமிழ் வர்த்தகப் பிரமுகர்கள் என பெரு எண்ணிக்கையிலானவர்கள் கலந்து கொண்டனர்.

படங்கள் : இக்பால் அலி



அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் மத்திய செயற்குழுக் கூட்டமும் கேகாலை மாவட்டக் கிளைகள் அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்ட கேகாலை மாவட்டத்தில் ஓய்வு பெற்ற அதிபர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் மீலாத் விழாப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் மாவனல்லை தெவ்மினி ஹோட்டலில் தேசியத் தலைவர் இஹ்திசாம் ஏ. ஹமீட்டின் வழிகாட்டலுடன் கேகாலை மாவட்டப் பணிப்பாளர் லுக்குமான் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மலேசியா நாட்டின் தூதுவர் பத்லி ஹிசாம் ஆதமும் சிறப்பு விருந்தினராக தொழிலதிபர் டப்ளியூ. எம். எம். எஸ். எம் கமால் தீன், அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் முன்னாள் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி, டீன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

படங்கள் : இக்பால் அலி





பதுளை, இங்குருகம, காத்தான் லயக் குடியிருப்புகளுக்கான 1.5 Km நீளமான பாதை ரூ. 20 மில்லியன் செலவில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. இப்பாதையை கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் திறந்து வைத்து மக்கள் பாவனைக்காக கையளித்தபோது....

# தற்போது நிலவும் போஷாக்கு குறைபாடுகள் பிள்ளைகளின் கல்வியை பாதிக்கும்

## டொக்பர் சகீலா இஸ்ஸடீன் தெரிவிப்பு

(பாலமுனை விசேட நிருபர்)

தவறான உணவு பழக்கத்தால், போஷாக்குச் சத்துகள் குறைந்து சிறுவர்கள் பாதிக்கப்படுவதாகவும் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கும் பெற்றோர் பிள்ளைகளின் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி சகீலா இஸ்ஸடீன் தெரிவித்தார்.

சம்மாந்துறை கல்வி வலயத்துக் குட்பட்ட வீரத்திடல் அல் ஹிதாயா மகா வித்தியாலயத்தில் (22) இடம் பெற்ற வித்தியாரம்ப விழாவில் பிரதம அதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியை வழங்கவே பெற்றோர் பாடுபடுகின்றனர். இவர்களை நற்பிரஜைகளாக்குவதுதான் அவர்களின் விருப்பம். கல்வியில் ஆர்வம் செலுத்தும் பெற்றோர் குழந்தைகளின் ஆரோக்கியத்தில் அக்கறை செலுத்துகின்றார்களா? இது இன்று கேள்விக்குறியாகவே உள்ளது.

ஒரு பிள்ளை சிறந்த கல்வியைப் பெற வேண்டுமாக இருந்தால், முதலில் ஆரோக்கியமாக இருக்க வேண்டும். எமது பிராந்தியத்தில் சிறுவர்களிடையே போஷாக்கு குறைபாடு காணப்படுகிறது அதிலும் குறிப்பாக ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளிடையே இந்தப் பிரச்சினையுள்ளது. போஷாக்கு குறைபாடு பிள்ளைகளின் கல்வியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதனை சகலரும் புரிந்து கொள்ள வேண்டும்.



நாம் கடல் வளத்தினையும் இரும்புச் சத்து மிக்க உணவுகள் காணப்படும் பிரதேசத்திலே வாழ்கிறோம். போஷாக்கு குறைபாட்டினாலும், இரத்தச் சோகை நோயினாலும் சிறுவர்கள் பாதிக்கப்படுவது கவலையான விடயமாகும். மக்கள் வழமைக்கு மாறாக தவறான உணவுப் பழக்கத்தினை கொண்டிருப்பதனாலே இவ்வாறான துர்ப்பாக்கிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம். எனவே பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளுக்கு போஷாக்குள்ள உணவுகளை வழங்குவதிலும் அவர்களின் ஆரோக்கியத்திலும் அக்கறை செலுத்த வேண்டும் என்றார்.

# கிழக்கின் குரல்



மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை சிறைச்சாலைகளுக்கான மேலதிக சிறைச்சாலை கண்காணிப்புக் குழு உறுப்பினராக எஸ்.ஜீவன்ராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இந்நியமனத்தை வழங்கினார். இவருக்கான நியமனக் கடிதம் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தலைமையகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவனேசத்துரை சந்திரகாந்தனும் கலந்து கொண்டிருந்தார்.

# மண்முனை தென் எருவில் பற்று இளைஞர் கழக நிர்வாகிகள் தெரிவு



(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)

மண்முனை தென் எருவில் பற்று பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய நிர்வாகப் புனரமைப்பு பொதுக் கூட்டம், பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச இளைஞர் சேவை உத்தியோகஸ்தர் த.சபியதாஸின் ஒழுங்கமைப்பில் சம்மேளன தலைவர் தி.ஜெகநாதனின் தலைமையில் (23) இடம்பெற்றது.இதில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் மட்டக்களப்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் நா.கு கேந்திரா, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி திருமதி. நிஷாந்தி அருள்மொழி, மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் தலைவர் யுவப்பிரகாஷ், முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர் கு.துஷாந்தன் மற்றும் பிரதேச இளைஞர்கள், யுவதிகள் கலந்து கொண்டனர்.

# முதலைகளின் பெருக்கம் அதிகரிப்பு

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

தாழ்நிலப் பகுதிகளில் தேங்கிய மழைநீர் வற்றாதுள்ள தால், அப்பகுதியில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்துள்ளது.அண்மையில் பெய்த மழையால் மட்டக்களப்பு மாவட்டத்தின் பல தாழ்நிலப்பகுதிகளில், வெள்ள நீர் தேங்கியது.இந்நீர் இன்னும் வற்றாதுள்ள நிலையில் இப்பகுதியில் முதலைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளன.

ஆரையம்பதி பிரதேச செயலக பிரிவுக் குட்பட்ட ஒல்லிக்குளம் கிராமத்தில் ஒல்லிக்குளத்தை அண்டியுள்ள நீர்நிலைகளில் சுமார் ஐந்து முதலைகள் உள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# மயோன் முஸ்தபா நினைவாக சாய்ந்தமருதில் கல்வி வள நிலையம்



(கல்முனை விசேட நிருபர்)

முன்னாள் உயர் கல்வி பிரதி அமைச்சர் மர்ஹூம் மயோன் முஸ்தபாவின் நினைவாக, கல்வி வள நிலையம் அமைப்பது தொடர்பாக கலந்துரையாடப் பட்டுள்ளது.அன்னாரின் புதல்வரும் மயோன் குறூப் நிறுவனத்தின் தவிசாளருமான றிஸ்லி முஸ்தபா தலைமையில் (23) இக்கலந்துரையாடல் நடைபெற்றது. நாடு, சமூகம் மற்றும் பிராத்திய முன்னேற்றம் தொடர்பில் அதிக கரிசனை, தூரநோக்குடன் செயற்பட்டு தனது பொருளாதாரத்தை அர்ப்பணிப்புச் செய்தவர் மர்ஹூம் மயோன்முஸ்தபா.அவரது, உயரிய எண்ணங்களை நிறைவேற்றும் பொருட்டு, சாய்ந்தமருது மாவடி வீதியில் அமைந்துள்ள இல்லத்தை பொதுத் தேவைகளுக்காக பயன்படுத்துவதற்கு அவரது புதல்வர்களான றிஸ்லி முஸ்தபா, றம்லி முஸ்தபா, புதல்வியான றிஸ்னா முஸ்தபா, சகோதரரான கணக்காளர் எம்.எம். இப்றாஹிம் மற்றும் மருமகன் செய்ன் மர்சூக் ஆகியோர் தீர்மானித்துள்ளனர்.

# இலவச கண்புரை சத்திர சிகிச்சை முகாம்



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில், நூற்றுக்கும் மேற்பட்டவர்களுக்கு இலவச கண்புரை சத்திர சிகிச்சைகள் (23) மேற்கொள்ளப்பட்டன. தேசிய கண் வைத்தியசாலை வைத்தியர்கள் குழுவினர் இச்சத்திர சிகிச்சையை மேற்கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தின் பல பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட நோயாளர்கள் இதில் சிகிச்சை பெற்றுக்கொண்டனர்.

பிரித்தானியாவின், RR நிறுவனத்தின் தலைவர் சர்வீஸ் வருன், வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவினர் மற்றும் சம்மாந்துறை லயன்ஸ் கழகத்தினர் அனுசரனையில் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. சம்மாந்துறை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் அஸாத் ஹனீபா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கலந்துகொண்டார்.

## ஐக்கிய குடியரசு முன்னணியின் முன்மொழிவு ஜனாதிபதியிடம் கையளிப்பு

ஐக்கிய குடியரசு முன்னணியின் "நாட்டுக்கான ஒன்றுபட்ட நடவடிக்கை" என்ற தலைப்பிலான முன்மொழிவு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் கையளிக்கப்பட்டது.ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க உள்ளிட்ட குழுவினர், ஜனாதிபதியை சந்தித்து இதைக் கையளித்தனர்.இந்நிகழ்வு (24) கொழும்பிலுள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் வீழ்ச்சி அடைந்த பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த அரசாங்கம் கடந்த இரண்டு வருடங்களில் கடுமையாக உழைத்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

மறுசீரமைப்புத் தீர்மானங்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மிகச் சரியான பாதையில் கொண்டு செல்வதற்கு அரசாங்கம் செயற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைவரினதும் ஆதரவுடன் இதனை மேலும் நடைமுறைப்படுத்துவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

06



# புதிய கூட்டணியில் புதிதாக 58 பேர் இணைவதாக தெரிவிப்பு

### இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனும் இணைந்தார்



பாராளுமன்ற உறுப்பினர் நிமால் லான்சா தலைமையிலான புதிய கூட்டணியின் இரண்டாவது பேரணியில் இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன், பாராளுமன்ற உறுப்பினர்களான சுதத் மஞ்சுள, உதயகாந்த குணதிலக்க மற்றும் மேல் மாகாண முன்னாள் முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய, மேல்மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் சுமித்லால் மெண்டிஸ் ஆகியோர் இணையவுள்ளனர். புதிய கூட்டணியின் பேரணி கொழும்பு, ஹை பார்க் கோணரில் ஆரம்பமானபோது, இவர்கள் அனைவரும் வருகை தந்து மேடையில் கைகோர்த்து நின்றனர். புதிய கூட்டணியின் இரண்டாவது பொதுக்கூட்டம் (24) பிற்பகல் 2.30 மணிக்கு கொழும்பு ஹைட் பார்க் மைதானத்தில் "வலுவான பொருளாதாரம் – வெற்றிகரமான பயணம்" என்ற தொனிப்பொருளில் ஆரம்பமானது. புதிய கூட்டணி பொதுக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

புதிய கூட்டணியில் முன்னாள் மேயர்கள், கொழும்பு மாவட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் என 58 பேர் இணைந்து கொள்ளவுள்ளவுள்ளதுடன் புதிய கூட்டணியின் திட்டத்துக்கு ஆதரவாக ஒன்று கூடியது.

புதிய கூட்டணியின் கொழும்பு மாவட்டத் தலைவர் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த, புதிய கூட்டணியின் செயற்பாட்டுத் தலைவர் அனுர பிரியதர்ஷன யாப்பா, புதிய கூட்டணியின் ஸ்தாபகர் நிமல் லான்சா, புதிய கூட்டணியின் கம்பஹா மாவட்டத் தலைவர் அமைச்சர் நளின் பெர்னாண்டோ, கொழும்பு மாவட்ட அமைப்பாளர் சுகீஸ்வர பண்டார, ஜே.வி.பி.யின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிறிபால அமரசிங்க, ஸ்ரீநாத் உள்ளிட்டோரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மகாசங்கத்தினர் உட்பட 38 தொழிற்சங்கங்களின் உறுப்பினர்கள், தொழிற்சங்க தலைவர்கள், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், கலைஞர்கள், சட்டத்தரணிகள், தொழில் வல்லுனர்கள், 19 சார்பு அமைப்புக்கள், ஆதரவாளர்கள் என பெருந்தொகையானோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## தவக்கால சிந்தனை



## மன்னிப்பவர்களாய் இருப்போம்

நமக்குத் தெரிந்தபடி, தவக்காலம் என்பது இயேசுவைப் பின்பற்றுபவர்களாக நமது விசுவாச வாழ்வினை வலுப்படுத்தும் நோக்கிலான உள்ளகத் தியானிப்பின் தயாரிப்பின் காலமாகும்.

பொதுவாக தவக்காலத்தில் இறைவேண்டல், உண்ணாநோன்பு, தர்மசெயல்கள் போன்றவற்றில் கவனம் செலுத்தினாலும், இன்றைய நற்செய்தியில் நாம் கவனம் செலுத்துவதற்காக இயேசு மூன்று விடயங்களை முன்னிறுத்துகின்றார்.

மனித ரீதியில் நோக்குகையில் அவை நமக்கு புதிய வாழ்வினைப் பெற உதவதுடன், உயிர்ப்பு என்கிற புதிய வாழ்வினை நோக்கி நம்மை நகர்த்துகின்றது.

லூக்கா நற்செய்தியின் மூன்று வார்த்தைகளில், இயேசு நமக்கு கூறுவது யாதெனில், இரக்கமுள்ளவராய் இருங்கள், தீர்ப்பிடாதீர்கள், மன்னியுங்கள் என்பதாகும்.

நம் வாழ்வின் ஏதொவொரு கட்டத்தில் இந்த மூன்றிலும் இல்லாவிட்டாலும், ஏதாவது ஒன்றில் தவறியிருப்போம் என்று நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள முடியுமென நான் உறுதியாக நம்புகிறேன்.

எனவே இன்றைய நமது இறைவேண்டலானது திருப்பாடல் ஆசிரியர் கூறுவதுபோன்று, "ஆண்டவரே, எங்கள் பாவங்களுக்கேற்ப எங்களோடு நடந்து கொள்ளாதேயும்" என்பதாகும்.

இத்தவக்காலப் பயணத்தின் போது, நாம் தொடர்ந்து இறைவேண்டல் புரியும்போதும், நோன்பு நோற்கும்போதும், தொண்டுப்பணிகளைச் செய்யும்போதும், இரக்கமுள்ளவராய், தீர்;ப்பிடாதவர்களாய், மன்னிப்பவர்களாய் இருக்க நினைவிற் கொள்வோம்.

அருட்தந்தை நவாஜி...
(திருகோணமலை மறைமாவட்டம்)

## கொத்மலை ஓயாவில் நீராடிய சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழப்பு

*(தலவாக்கலை குறூப் நிருபர்)*



கொத்மலை ஓயாவில் நீராடச் சென்ற மாணவர்களுள் ஒரு மாணவர், நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

தலவாக்கலை நகரைச் சேர்ந்த திலிப கமகே (14) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தலவாக்கலை, லிந்துலை, நாகசேனை பிரதேசத்தில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. லிந்துலை நாகசேனை பிரதேசத்திலிருந்து பாயும் கொத்மலை ஓயாவில் குளிப்பதற்கு சிறுவர்கள் குழுவொன்று, நேற்று பிற்பகல் சென்றுள்ளது.

இதன்போது கொத்மலை ஓயாவில் நீராடிய இச்சிறுவர்களில் ஒருவர் காணாமல் போனதையடுத்து லிந்துலை பொலிஸார் மற்றும் பிரதேசவாசிகள் தேடுதல் நடத்தினர். இதன்போது சிறுவனின் சடலம் மீட்கப்பட்டு லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.சிறுவன் ஏற்கனவே உயிரிழந்ததாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டது.

## நிகழ்நிலை காப்பு சட்டத்தில் திருத்தம் செய்ய நடவடிக்கை

### அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளரிடம் அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு

நிகழ்நிலைப் காப்புச் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளை வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி அண்மையில் அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மாவிடம் எடுத்துரைத்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ மற்றும் வளங்களுக்கான பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மாவுக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரிக்கும் இடையிலான சந்திப்பிலே மேற்கண்ட விடயத்தை அவர், எடுத்துரைத்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

போலியான தகவல்கள், வெறுப்புப் பேச்சுக்கள், உள்ளிட்ட சமூக ஊடகங்களின் ஊடாக முன்னெடுக்கப்படும் முரண்பாடான விடயங்களை ஒழுங்குபடுத்துவதை நோக்கக் கொண்டே நிகழ்நிலைப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

இருப்பினும் அந்த சட்டத்தில் காணப்படும் சில உட்பிரிவுகள் சம்பந்தமாக பிரதி இராஜாங்கச் செயலாளர் ரிச்சர்ட் வர்மா, தமது கரிசனைகளை வெளிப்படுத்தினார். இதன்போது அரசாங்கம் இச்சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளமையை தெளிவு படுத்தியதாக அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

விசேடமாக, சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்காக அமைச்சரவையில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு சிவில் அமைப்புக்களின் பரிந்துரைகளையும் உள்ளீர்ப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளமை குறித்தும் எடுத்துரைத்ததாக அவர் கூறினார்.


## பகிரங்க ஏலவிற்பனை

மல்டி பினான்ஸ் பிஎல்சி நிறுவனத்தில் வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் காலை 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 03/10/17/25 | ஏப்ரல் 2024 | இல. 56, சந்தை இடம், அனுராதபுரம். |
| 03/10/17/25 | ஏப்ரல் 2024 | இல. 16, கோர்ட் ரோடு, கம்பஹா. |
| 02/09/16/24 | ஏப்ரல் 2024 | இல. 134, அநாகரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 02/09/16/24 | ஏப்ரல் 2024 | இல. 72, சிமன்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10. |
| 04/18/26/29 | ஏப்ரல் 2024 | இல. 74/76, கண்டி வீதி, குருநாகல். |
| 04/18/26/29 | ஏப்ரல் 2024 | இல. 865, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கண்டி. |
| 01/08/15/22 | ஏப்ரல் 2024 | இல. 207, பிரதான வீதி, இரத்தினபுரி |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


## தேடித்தாருங்கள்



மேற்படி புகைப்படத்தில் காணப்படும் 68 வயதுடைய நோயுற்ற நிலையில் இருக்கும் எஸ். சூரியகுமார் என்பவரை 2023.11.16ம் திகதி முதல் காணவில்லை. அவர் பற்றிய தகவல்கள் தெரிந்திருப்பின் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுக்கு அல்லது அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்குமாறு தயவுடன் வேண்டிக்கொள்கிறோம்.

**சரியான தகவல்களுக்கு பரிசு வழங்கப்படும்**

**0741534993**
**0779825602**


## விலைமனு அறிவித்தல்

பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களிடம் இருந்து பத்தரமுல்லை, வோட்டர்ஸ் எட்ஜ் லிமிடெட்டினால் முத்திரை பொறிக்கப்பட்ட கூறுவிலைகள் கோரப்படுகின்றன. விலைமனுதாரரர்கள் தனிப் பிரிவு அல்லது பல்வகை பிரிவுகளுக்காக விலைமனுக்களை சமர்ப்பிக்க முடியும்.

1) விலைமனு பெயர்: வாகனங்களின் வாடகைக்காக சேவை வழங்கல் விலைமனு இல. - **WE/PUR/HV/2024/05**
2) விலைமனு பெயர்: நடனத் தளத்தின் வழங்கல் விலைமனு இல. - **WE/PUR/FF/2024/06**
3) விலைமனு பெயர்: பூச்சி கட்டுப்பாட்டு சேவை வழங்கல் விலைமனு இல. - **WE/PUR/PS/2024/07**
4) விலைமனு பெயர்: வெளி பணியாளர் சேவை வழங்குநர் விலைமனு இல. - **WE/PUR/OS/2024/08**

**குறிப்பு**

கேள்விமனு படிவம் ஒன்றுக்கு ரொக்கப்பணத்தில் ரூபா 2,000 மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்தி வார நாட்களில் மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே 2024 பெப்ரவரி 23 ஆம் திகதி தொடக்கம் 2024 மார்ச் 18 ஆம் திகதி வரை வோட்டர்ஸ் எட்ஜ் லிமிடெட்டின் கொள்வனவு பிரிவில் இருந்து கேள்விமனு படிவங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணத்தை பெற முடியும்.

5) விலைமனு பெயர்: நீச்சல் தடாக பகுதியின் முன்மொழியப்பட்ட சீரமைப்பு விலைமனு இல. - **WE/PUR/PO/2024/02**
   - பொறியியலாளரின் மதிப்பீடு: இ.ரூபா 36 மில்லியன் + VAT
   - நிர்மாணக் காலம்: 90 நாட்கள்
   - ஒப்பந்ததாரரின் தரம்: SP 2 (SP-C – தரை, சுவர் மற்றும் உட்கூரை முடித்தல்கள்) அல்லது அதற்கு மேல்/ C-5 அல்லது அதற்கு மேல்
   - மீளளிக்கப்படாத வைப்பு: இ.ரூபா 5000/=
   - விலைமனு பிணை: இ.ரூபா 400,000/=
   - விலைமனு வழங்கும் காலம்: 2024 பெப். 24 தொடக்கம் 2024 மார்ச் 15 வரை
   - விலைமனுவுக்கு முன் சந்திப்பு: 2024 மார்ச் 08
   - விலைமனு மூடப்படும் திகதி: 2024 மார்ச் 18

**குறிப்பு: 2024 மார்ச் 18 ஆம் திகதி விலைமனு மூடப்படும்**

தலைவர் பெறுகைக் குழு (DPC சிரேஷ்ட/ கனிஷ்ட)
வோட்டர்ஸ் எட்ஜ் லிமிடெட்
மேலதிக விபரங்களுக்கு பார்க்கவும் : https://www.promise.lk
https://www.watersedge.lk/news/
தொலைபேசி : 0112863863/ 0112887050 (நீடிப்பு 3030)







தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் மாசி மாதம் 14ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ஷஃபான் பிறை 15

### குறள் தரும் சிந்தனை

இருமை வகைதெரிந்து ஈண்டுஅறம் பூண்டார்
பெருமை பிறங்கிற்று உலகு

நன்மை எது, தீமை எது என்பதை ஆய்ந்தறிந்து நன்மைகளை மேற்கொள்பவர்களே உலகில் பெருமைக்குரியவர்களாவர்.

## பொருளாதார முன்னேற்றத்துக்கு இனஒற்றுமையே அத்திவாரம்

இலங்கை நாலாபுறமும் கடலால் சூழப்பட்ட இயற்கைகள் வளங்கள் நிறைந்த தேசமாகும். நாடொன்று முன்னேற்றப் பாதையில் பயணிப்பதற்குத் தேவையான அனைத்து வளங்களும் இங்கு காணப்படவே செய்கின்றன.

இருந்த போதிலும் இந்நாடு இன்னும் மூன்றாம் மண்டல நாடாகவும் வளர்முக நாடாகவுமே அடையாளப்படுத்தப்படுகிறது. அத்தோடு கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கும் உள்ளானது. அதன் விளைவாக மக்கள் பல்வேறு விதமான அசௌகரியங்களுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம்கொடுத்தார்கள்.

பொருளாதார ரீதியில் முன்னேற்றப் பாதையில் பயணிப்பதற்குத் தேவையான வளங்களை தன்னகத்தே கொண்டிருந்தும் கூடஇன்னும் மூன்றாம் மண்டல நாடாகவும் வளர்முக நாடாகவும் இலங்கை இருப்பதற்கான காரணம் யாது? என்ற கேள்வி பலர் மத்தியில் காணப்படவே செய்கின்றது.

பிரித்தானிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது ஆசியாவில் ஜப்பானுக்கு அடுத்த நாடாக பொருளாதார ரீதியில் இலங்கை காணப்பட்டது. ஆனால் சுதந்திரம் பெற்று ஏழு தசாப்தங்களுக்கும் மேலாகிவிட்ட போதிலும் கூட நாடு இன்னும் பொருளாதார ரீதியில் பலமான நிலையை அடைந்து கொள்ளவில்லை.

இந்நாடு சுதந்திரம் பெற்ற போது இலங்கையை விடவும் பின்தங்கிய நிலையில் இருந்த பல நாடுகள் இந்நாட்டை விடவும் பல மடங்கு முன்னேற்றமடைந்து விட்டன. ஆனால் இலங்கை தொடர்ந்தும் பின்னடைவுக்கு உள்ளான நாடாகவே உள்ளது.

பல்லின மக்கள் வாழுகின்ற நாடாக விளங்குகின்ற போதிலும் இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டுத்தான் சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டது இலங்கை.

ஆனால் சுதந்திரத்திற்குப் பின் வந்த ஓரிரு அரசியல் கட்சிகளைச் சேர்ந்தோரும், ஒரிரு ஆட்சியாளர்களும் தங்கள் அரசியல் நலன்களுக்காக பல்லின மக்கள் வாழும் நாடொன்றில் முன்னெடுக்கப்படக் கூடாத தவறானதும் பிழையானதுமான வேலைத் திட்டங்களை மேற்கொண்டனர். அவ்வேலைத்திட்டங்களின் விளைவுகள் மற்றும் பாரதூரம் குறித்து அவர்கள் கவனம் செலுத்தத் தவறினர். அதன் காரணத்தினால் பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு சுதந்திரத்தைப் பெற்றெடுத்த மக்கள் மத்தியில் சிறுபான்மை, பெரும்பான்மை பார்வை தோற்றம் பெற்றது. அத்தோடு சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற நோக்கும் மேலோங்கியது.

இதன் விளைவாக சிறுபான்மை மக்கள் மத்தியில் சந்தேகங்களும் மேலோங்கலாயின. அவை ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் போன்று ஒற்றுமையாக வாழும் மக்கள் மத்தியில் பிரிவினைகளுக்கு வழியேற்பட்டது. அதற்கு ஓரிரு அரசியல் கட்சிகளும் துணை போயின.

அவ்வாறான அரசியல் கட்சிகளும் ஓரிரு அரசியல் தலைவர்களும் நாட்டின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை அளித்து செயற்படத் தவறியதன் விளைவாகவே நாடு இவ்வாறான நிலைக்கு உள்ளானது. அதுவே நடுநிலை அரசியல் அவதானிகளின் கருத்தாகும்.

நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஒன்றுபட்டுச் செயற்பட்டது போன்று அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்பட்டிருக்க வேண்டும். துரதிர்ஷ்டவசமாக அதற்குத் தவறிவிட்டனர். அதன் விளைவாக இந்நாடு இன்னும் பின்தங்கிய நாடாக உள்ளது.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, 'நாங்கள் சிங்களம், தமிழ், முஸ்லிம் எனப் பிரிந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் எமது நாடு பாதாளத்துக்குள் விழுந்துள்ளது. எங்களை மதத்தால் பிரித்தார்கள். இனத்தால் பிரித்தார்கள். அந்த சந்தர்ப்பங்களில் நாங்கள் விழுந்தோம். அதனால் இன, மத பேதங்களை ஒதுக்கி விட்டு நாங்கள் ஒன்றுபட்டு இலங்கையை வெற்றி கொள்வோம்' என்றுள்ளார்.

அதுதான் உண்மை. இன, மத ரீதியிலான பார்வையும் நோக்கும் மேலோங்குவதால்தான் இந்நாடு பின்னடைவுக்கு உள்ளாகி வருகிறது. இதற்கு சுநத்திரத்திற்கு பின்னரான காலப்பகுதி நல்ல எடுத்துக்காட்டாகும்.

இலங்கையைப் போன்று பல்லின மக்கள் வாழும் பல நாடுகள் உறுதியான பொருளாதாரத்தைக் கொண்ட நாடுகளாக முன்னேற்றமடைந்துள்ளன. பேதங்களுக்கு அப்பாலான ஒற்றுமையே அந்நாடுகளின் முன்னேற்றத்திற்கு அடித்தளமாக விளங்குகின்றன. அவ்வாறான நிலைமை இலங்கைக்கும் அவசியமானது.

ஆகவே கடந்தகால அனுபவங்கள் மற்றும் பல்லின மக்கள் வாழும் நாடுகளின் முன்னேற்றத்தின் பின்புலம் என்பவற்றில் கவனம் செலுத்தி இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட்டு செயற்படுவதே இன்றைய தேவையாகும். அதுவே பலமான பொருளாதார நாடாக இத்தேசத்தைக் கட்டியெழுப்ப வழிவகுக்கும்.

editor.tkn@lakehouse.lk

# நாட்டின் பொருளாதார மீட்புக்கு வாழைச்சேனை காகிதஆலை பயன்படுத்தப்படுவது அவசியம்

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் வாழைச்சேனை என்றதும் அங்கு அமைந்துள்ள கடதாசித் தொழிற்சாலைதான் அனைவருக்கும் நினைவுக்கு வரும். 1990 களில் இத்தொழிற்சாலை மூடப்பட்டது.

1947 இல் ஐ.தே.க அரசாங்கத்தில் கைத்தொழில் அமைச்சராக ஜோர்ஜ் ஈ. டி சில்வா பதவி வகித்தார். அப்பதவி 1948 இல் ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்களுக்கு வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1951 இல் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலைக்கு ஜி. ஜி. பொன்னம்பலம் அடிக்கல் நாட்டினார். ஜேர்மன் நாட்டின் உதவித் திட்டத்தின் கீழ் இத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

1952 இல் நடைபெற்ற பொதுத்தேர்தலிலும் ஐ.தே.கவே ஆட்சிக்கு வந்தது. அந்த அரசிலும் ஜி. ஜி. பொன்னம்பலமே கைத்தொழில் அமைச்சரானார். அதனால் அவர் அடிக்கல் நாட்டி ஆரம்பித்த கடதாசித் தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகள் அமரர் டட்லி சேனநாயக்க அவர்களின் ஆட்சியிலும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டன.

1953 இல் இடம்பெற்ற ஹர்த்தாலைத் தொடர்ந்து சேர் ஜோன் கொத்தலாவல நாட்டின் பிரதமராகப் பதவி ஏற்ற போதிலும் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் அமைச்சுப் பதவி மாற்றமடையவில்லை. அதன் பயனாக அவர் ஆரம்பித்த வாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலையின் நிர்மாணப் பணிகள் 1956 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியாகும் போது நிறைவடையும் கட்டத்தை அடைந்தன. நீண்ட காலம் பலர் மேற்கொண்ட அர்ப்பணிப்பு மிக்க பணிகளின் ஊடாக கிழக்கு கடதாசி ஒருங்கிணைப்பு சபை என 1956 இல் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

2015 முதல் 2020 வரையும் மின்சாரம் இல்லாத காரணத்தினால் இத்தொழிற்சாலை மூடப்பட்டிருந்தது. 2020 இல் இத்தொழிற்சாலை அரசாங்கத்தின் ஏற்பாட்டில் மீண்டும் திறக்கப்பட்டது. 50 வருடங்களுக்கு முன்னர் ஜேர்மன் பொறியியலாளர்களால் நிர்மாணிக்கப்பட்ட இத்தொழிற்சாலையில் உள்ள சிறந்த தொழில்நுட்ப பெறுமானங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின்படி, மீண்டும் உற்பத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய நிலையில் இங்குள்ள உற்பத்தி இயந்திரங்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.









இத்தொழிற்சாலையின் நலனுக்காக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். யோகேஸ்வரன் அதிக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றாரென்பது குறிப்பிடத்தக்கது. இதன் அபிவிருத்திக்காக முன்னர் அவர் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பியுமுள்ளார்.

நான் இத்தொழிற்சாலையின் தகுதிகாண் அதிகாரியாகக் கடமையாற்றிய காலப்பகுதியில் நிறுவனத்தின் வளங்களைப் பாதுகாத்து உற்பத்திக் கொள்ளளவை அதிகரித்தேன். நாடு எதிர்கொண்ட சவால்களை வெற்றிகொண்டு நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கப் பெற்றிருக்கிறது. அதனால் வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையை அபிவிருத்தி செய்து அதற்குரிய காணியில் சுற்றுலா ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டத்தை முன்னெடுத்து 2000 தொழில் வாய்ப்புக்களை உருவாக்க முடியும். அதன் மூலம் நாட்டை மீளக்கட்டியெழுப்ப முழுமையாக ஒத்துழைப்பு நல்க முடியும் என நம்புகிறேன்.

சரியான நிகழ்ச்சி நிரல் ஊடாக இதனை முன்னெடுக்க முடியும். இந்த அனைத்து விடயங்களையும் புரிந்து செயற்படுவது அவசியம். எவரொருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தாலும் அதன் உண்மைத்தன்மையைப் புரிந்து கொள்வது மக்கள் அபிப்பிராயத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு அறிவுபூர்வமான வழிமுறையாக அமையும். வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலையை இந்நாட்டின் பொருளாதாதார மேம்பாட்டுக்கு பங்களிக்கும் வகையில் மேம்படுத்துவது அவசியம். நாட்டின் காகித உற்பத்தியின் கேந்திர நிலையமாக அதனை உருவாக்க வேண்டியது அவசியம்.

இதற்கு கடதாசித் தொழிற்சாலை மாத்திரமல்லாமல் இந்த அபிவிருத்தி கருத்திட்டத்தையும் இங்கு முன்னெடுப்பது அவசியம். அதற்காக தொடராக ஒத்துழைப்பது அவசியம்.

**தேசமான்ய மங்கள சீ செனரத்...**
முன்னாள் தகுதிகாண் அதிகாரி,
வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை

# இசைமொழி ஊடாக இன ஒற்றுமையை வெளிப்படுத்திய தமிழ், சிங்கள மாணவர்கள்

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம் கிழக்கிலங்கையின் பெரும் கலைக்கூடம். 2002 இல் ஆரம்பிக்கப்பட்ட இது கடந்த 20 வருட காலங்களை கடந்து வந்துள்ளது. அதனை அருகிலிருந்து அவதானிக்கும் வாய்ப்பும், அதனோடு பயணிக்கும் வாய்ப்பும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அதனால் அதனை உள்ளும் புறமும் அறியும் வாய்ப்பும் வாய்த்திருக்கிறது.




அதன் வளர்ச்சியில் பங்கு கொண்டோர் பலர். அண்மைக் காலமாக அதன் செயல்பாடுகள் பல்துறைப்பட்டனவாக வளர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. அங்கு கல்விபயிலும் நடன, நாடக, ஓவியத்துறை மாணவர்கள் வெளிநாடுகளுக்கும் சென்று தங்கள் திறமைகளைக் காட்டி வருகிறார்கள். இந்தப் பின்னணியிலேயேதான் அண்மையிலே அந்த நிறுவகம் கொழும்பு கட்புல, ஆற்றுகைப் பல்கலைக்கழகத்தோடு இணைந்து நடத்திய இசைநிகழ்வை பார்க்க வேண்டி உள்ளது

இது நடந்தது 14.02.2024 அன்று ஆகும். ஏறத்தாழ முப்பதுக்கு மேற்பட்ட சிங்கள மாணவர்களும் 60 இற்கும் மேற்பட்ட தமிழ் மாணவர்களும் இணைந்த நிகழ்வு ஒன்றை மேடையில் காணும் வாய்ப்புக் கிடைத்தது. மேடையில் பெரும் தொகை மாணவரக்ள் இணைந்து கொண்ட பெரு நிகழ்வு அது. இதற்கு சிறப்பு விருந்தினராக நான் அழைக்கப்பட்டு இருந்தேன். இரண்டு பல்கலைக்கழக வேந்தர்களும் பிரதம விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தார்கள்.

இதன் ஒழுங்கமைப்பாளராகச் செயல்பட்டவர் திருமதி காமினி. கொழும்பு கட்புல ஆற்றுகைப் பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளரான இவர் இனக்குழும இசையில் கலாநிதி பட்டத்துக்கான ஆய்வை மேற்கொண்டிருப்பவர். அவருக்கு உதவியாக இசைத்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பிரியா ஜதீஸ்வரன், இசைத் துறைத் தலைவி கலாநிதி நிர்மலேஸ்வரி ஆகியோர் இருந்திருக்கிறாரக்ள்.

ஒளி வசதிகளை நாடக விரிவுரையாளர் தர்மலிங்கம் செய்திருந்தார். கொழும்பு கட்புல ஆற்றுகைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒரு இளைஞர். அவரது பெயர் றோகன் நெத்சிங்கா. அவர் ஒரு இசைப்பேராசிரியர். அவர் ரஷ்யாவில் இசைத்துறையில் ஆராய்ச்சி செய்தவர். இனக்குழும இசை (Ethnomusicology) அவரது ஆய்வுத்துறையாகும். அவரோடு உரையாடும் போது அவரது ஆர்வமும் அறிவும் செயல்திறனும் தெரிந்தன.

கொழும்பு கட்புல ஆற்றுகைப் பல்கலைக் கழக இசைத்துறையும் விபுலானந்த அழகியல் கற்கைகைகள் நிறுவ இசைத் துறையும் இணைந்து இந்த நிகழ்வை நடத்தின. இசை நிகழ்வு பெரும்பாலும் இரு இனத்தாரிடமும் பயில் நிலையிலுள்ள கிராமிய இசைகளையே மையம் கொண்டிருந்தது. தாலாட்டு பாடல், ஒப்பாரிப் பாடல், சடங்குப் பாடல்,வேடிக்கைப் பாடல், நாடகப் பாடல் என அவை அமைந்திருந்தன. சிங்கள, தமிழ் இசை மரபுகளின் ஒற்றுமையை அங்கே காண முடிந்தது.

சிங்கள மாணவர்கள் தமிழ்ப் பாடல்களைப் பாடியதும், தமிழ் மாணவர்கள் சிங்களப்பாடல்களைப் பாடியதும் பின்னர் இரு சாராரும் இணைந்து சில பாடல்களைப் பாடியதுமான அந்த ஒற்றுமை மனதைக் கவர்ந்தது. இந்த அழகிய தீவில் வாழுகின்ற சிங்கள மாணவர்களுக்கும் தமிழ் மாணவர்களுக்கும் இடையே பெரும் சுவராக நிற்பது மொழியாகும். ஒருவர் மொழியை ஒருவர் அறியாத நிலை. நமது கல்வித் திட்டம் காரணமாக சிறு வயதில் இருந்தே இரு இன மாணவர்களும். மற்றவர்கள் மொழியை பூரணமாக அறிகின்ற வாய்ப்பு வாய்க்கவேயில்லை.

மொழி என்பது வெறும் உரையாடல் சாதனம் மாத்திரம் அல்ல, அது உணர்வு சார்ந்தது, ஒரு சமூகத்தின் வாழ்க்கை சார்ந்தது, அச்ச சமூகத்தின் பண்பாடு சார்ந்தது. மொழியை அறிவதன் மூலம் இன்னொரு சமூகத்தின் உணர்வையும் பண்பாட்டையும் வாழ்க்கையையும் நாம் அறியலாம். இந்தச் சந்தர்ப்பத்தை நம் சிறார்களுக்கு நமது கல்வித் திட்டம் ஏற்படுத்திக் கொடுக்கவே இல்லை.

இந்நிலையிலே இவ்விரு சாராரையும் இணைக்கின்ற ஒரு புதுமொழியாக இசைமொழி அமைந்திருந்தமை முக்கியமான அம்சமாகும்.

தமிழ் மாணவர்கள் தம் கோல உடைகளில் அதிகம் கவனம் செலுத்தவில்லை. சினிமா கவர்ச்சியே அங்கு அதிகம் காணப்பட்டது. சிங்கள மாணவர்கள் மேடை அமைப்புக்கான உடையை வடிவமைத்து இருந்தனர். அந்த உடையமைப்பு எளிமையாகவும் அழகாகவும் இருந்து ஒரு அழகியல் உணர்வைத் தந்தது. மேடைக்கு உடையமைக்கையில் ஒளியையும் கணக்கில் எடுக்க வேண்டும் அல்லவா, அதற்கு ஒரு அழகியல் இருக்க வேண்டும் அல்லவா?

தமிழ் மாணவர்கள் பின்னணி இசையாக உடுக்கை மாத்திரமே பாவித்தனர். சிங்கள மாணவர்கள்

கெட்ட பெர, மகுள் பெர என அழைக்கப்படும் சிங்கள மத்தளங்களையும் உடுக்குடன் நவீன இசைக்கருவிகளையும் பாவித்தனர். இதனால் அவர்கள் ஆற்றுகையில் செழுமையும் அழகும் தெரிந்தன.

மாணவர்கள் பலரை அழைத்துப் பாராட்டினேன். பாராட்டு கலைஞர்களுக்கு மிக இன்றி அமையாதது. விபுலானந்த மாணவிகளுட் பலர் கூச்ச சுபாவத்துடன் காணப்பட்டனர். அறையில் அமைதியாக இருந்து பாடப் பழக்கப்பட்டவர்கள் அவர்கள். அவர்களுக்கு கூச்சம் கலைய, உரத்துப்பாட ஒரு பயிற்சிப்பட்டறை அவசியம் என துறைத்தலைவியிடம் கூறினேன்.

விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவக இசைத்துறை இத்தகைய மேடை நிகழ்வுகளைச் செய்யும் போது அங்குள்ள நாடகத்துறை, ஓவியத்துறை ஆகியவற்றின் உதவிகளைப் பெற்றிருந்தால் மேலும் இந்நிகழ்வுசிறப்பாக இருந்திருக்கும் என என் அபிப்பிராயத்தை அவர்களிடம் கூறினேன். நிறுவகத்துள் வளம் கொட்டிக் கிடக்கிறது, ஒற்றுமையும் புரிந்துணர்வும் இணைந்து செயல்படும் எண்ணமுமே மிகமிக முக்கியம்.

நிறுவகப் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் கென்னடியும், கொழும்பு கட்புல ஆற்றுகை பல்கலைக் கழக உபவேந்தர் பேராசிரியர் மோகன் நெத்தசிங்காவும், கிழக்குப் பலகலைக்க்ழக உபவேந்தர் பேராசிரியர் கனகசிங்கம் அவர்களும் சிறப்பாக உரையாற்றினார்கள்.

இனஉறவுக்காக இதுகாலவரை செயல்பட்ட எம் போன்ற வயது போன பழம் தலைமுறை

வாழ்வின் சாயங்காலப் பொழுதில் இன ஒற்றுமையில் பெரும் நம்பிக் கையற்றவர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்த நிகழ்வுகள் பெரு நம்பிக்கையை தருகின்றன.



**(பேராசிரியர் மௌனகுரு அவர்களின் பதிவிலிருந்து)**

# அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் வித்தியாலயத்துக்கு பழைய மாணவர் சங்கத்தினால் மடிகணினி அன்பளிப்பு

பழைய மாணவர் சங்கத்தினால் அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் வித்தியாலயத்திற்கு மடிகணினி வழங்கி வைக்கப்பட்டது. பழைய மாணவர் சங்க செயலாளர் அதனை வழங்கி வைத்தார்.

பாடசாலையின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் மற்றும் இதர நடவடிக்கைகளை இணைய உலகுக்கு ஏற்றால்போல் வடிவமைப்பது இன்று சவால் நிறைந்த ஒன்றாக மாறிப்போயுள்ளது.

அந்த வகையில் அக்கரைப்பற்று அரசினர் ஆண்கள் வித்தியாலய அதிபர் மடிகணினியின் தேவையின் அவசியம் கருதி பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். குறித்த கோரிக்கையினை கருத்திற் கொண்டு அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும், அரசினர் ஆண்கள் வித்தியாலய பழைய மாணவர் சங்க



செயலாளருமான டொக்டர் ரஜாப் தனது சொந்த நிதியினூடாக மடிகணினியைப் பெற்று பாடசாலை அதிபர் ஐ.எல்.சாஜித்திடம் வழங்கி வைத்தார். இதன் போது சங்கத்தின் உறுப்பினரும், எம்.ஜே.எஸ்.குழுமத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான எம்.ஐ. எம்.ஜரீன் பிரசன்னமாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பாடசாலையின் கோரிக்கைகளை செவிசாய்த்து இவ்வாறான உதவி, ஒத்தாசைகளை வழங்கும் பழைய மாணவர் சங்கத்திற்கு பாடாசலை சமூகத்தினர் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவித்திருந்தனர்.

**றிசாத் ஏ. காதர்...**
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

## மானுடவியல்



154

திருஞானசம்பந்தப்பிள்ளையார், மற்றை நாள் பிராதக் காலத்திலே, ஆலயத்திற் சென்று, தம்முடைய பிதாமாதாக்களாகிய பரமசிவனையும் பார்வதியாரையும் வணங்கித் துதித்து, அருள்பெற்று, திருக்கோலக்கா வென்னுந் திருப் பதியை அடைந்து, திருக்கோயிலை வலஞ்செய்து முன்னின்று, கையினாலே ஒத்தறுத்துத் திருப்பதிகம் பாடத் தொடங்கினார். பாடும்பொழுது, சிவபெருமானுடைய திருவருளினாலே ஸ்ரீ பஞ்சாக்ஷரம் எழுதப்பட்டிருக்கின்ற பொற்றாளம் உலகமெல்லாம் உய்யும்படி பிள்ளையாருடைய திருக்கரத்தே வந்திருந்தது;. பிள்ளையார் அதைக் கண்டு, திருவருளை வியந்து, களி கூர்ந்து, ஏழிசையும் தழைத்தோங்க, திருப்பதிகத்தைப் பாடிமுடித்து, திருக்கடைக் காப்புச் சாத்தி நின்றார். அவர் பாடும் பொழுது, விண்ணுலகமும் அதிசயிக்கும்படி ஓங்கிய அதிமதுரநாதத்தை நோக்கித் தும்புரு நாரதர் முதலாகிய சங்கீதவித்துவான்கள் ஸ்தோத்திரஞ்செய்து, புஷ்பமாரி பொழிந்தார்கள். வேதசிவாகமங்கள் வாழும்படி திருவவதாரஞ் செய்தருளிய பிள்ளையார் மீண்டு சீர்காழிக்குப் போம்படி நடந்தார். நடக்கும் பொழுது, சிவபாதவிருதயர் தரிக்கலாற்றாமையால் தோளின் மேலே தரித்துக் கொள்ள, பிள்ளையார் அத்தோளின்மேல் எழுந்தருளி, சீர்காழியிலிருக்கின்ற திருக்கோயிலை அடைந்து, வலஞ்செய்து, சந்நிதானத்திலே நின்று திருப்பதிகம் பாடி வணங்கிக் கொண்டு, தம்முடைய திருமாளிகையை அடைந்து, அந்தச் சீர்காழியில் வாழுகின்றவர்களெல்லாரும் வாழும் பொருட்டு, தம்முடைய இளந்திருக்கோலக் காட்சியைக் கொடுத்து வீற்றிருந்தருளினார். அப்படியிருக்கும் பொழுது, அவருடைய தாயாராகிய பகவதியார் பிறந்த திருநனிப்பள்ளியில் இருக்கின்ற பிராமணர்கள் எல்லாரும் பெருமகிழ்ச்சியோடு அவ்விடத்திற்கு வந்து சேர்ந்து, அவரை வணங்கப் பெற்று இருந்தார்கள். பிள்ளையார் உலகமெல்லாம் உய்யும்படி சிவஞானம் பெற்ற பெருவார்த்தையைக் கேள்வியுற்று, சமீப ஸ்தலங்களிலிருக்கின்ற பிராமணர்களும் திருத் தொண்டர்களும் மற்றையனைவரும் அதிசயித்துத் திரண்டு வந்து, பிள்ளையாரை வணங்கி உய்ந்தார்கள். **(தொடரும்)**



கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# தர்மத்தின் பக்குவ நிலைபொருள்



ஒரு சாதாரண மனிதனுக்கு என்னவெல்லாம் சந்தேகம் வருமோ அவை அத்தனைக்கும் விளக்கமாக பதிலளித்துள்ளார் பகவான் கிருஷ்ணர். அதனாலேயே அனைத்து நூல்களுக்கும் தலைமை நூலாகவும், வேதங்களுக்கு நிகரானதாகவும் பகவத் கீதை கருதப்படுகிறது.

இந்து மதத்தின் புனித நூலாக போற்றப்படும் பகவத் கீதை, மிகப் பெரிய இதிகாச நூலான மகாபாரதத்தின் ஒரு பகுதியாகும். பகவான் கிருஷ்ணனுக்கும், அர்ஜூனனுக்கும் இடையே நடந்த உரையாடலே கீதையாகும். குருஷேத்திர போர் துவங்குவதற்கு முன் தனது சகோதரர்களான கௌரவர்களை எதிர்த்து எப்படி யுத்தம் செய்வது என யுத்த களத்தில் தடுமாறி நின்ற அர்ஜூனன் கேட்ட கேள்விகளுக்கு கிருஷ்ணர் விளக்கம் அளித்தார்.

5000 ஆண்டுகளுக்கு முன் கிருஷ்ணன் அர்ஜூனனுக்கு சொன்ன உபதேசங்கள் எல்லா காலத்திற்கு ஏற்றதாக அமைந்தது தான் இந்த தனிச்சிறப்பு. ஒருவரின் அனைத்து விதமான பிரச்சினைகளுக்கும் தீர்வாக இந்த உபதேசம் அமைந்துள்ளது. வாழ்க்கை மற்றும் வாழ்க்கையின் உண்மைகள் ஆகியவற்றை இந்த நூல் எடுத்துச் சொல்கிறது.

பகவத்கீதையின் மகிமை பற்றி கிருஷ்ணன்,

"ராஜ வித்யா ராஜ குஹ்யம் பவித்ரம் இதம் உத்தமம்

ப்ரத்யக்ஷாவகமம் தர்ம்யம் ஸூ ஸூகம் கர்தும் அவ்யயம்"

என குறிப்பிடுகிறார்.

தர்மத்தின் பக்குவ நிலைபொருள்: இந்த அறிவு, ஞானத்தின் அரசனும் எல்லா விதமான ரகசியங்களிலும் மிக உயர்ந்த தேவ ரகசியமானதும், மிக தூய்மையானதுமாகும். தன்னுணர்வின் அனுபவத்தை நேரடியாக அளிப்பதால் இதுவே தர்மத்தின் பக்குவ நிலையாகும். இது அழிவற்றதும், பேரின்பத்துடன் இணைந்து செயலாற்றுவதாகும்.

பகத்கீதையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதங்களில் விளக்கினாலும் இறுதியில் அதை கேட்பவரை தர்ம வழியில் கொண்டு செல்வதே அதன் நோக்கமாக இருக்கும். இதனால் மனிதன் எப்படி இருக்க வேண்டும் என்பதை,

"கர்மண்யே வாதிகாரஸ்தே மா பலேஷூ கதாசன

மா கர்மபல ஹேதுர்பூர் மாதே ஸங்கோ ஸ்த்வ கர்மணி"

இது பகவத் கீதையின் பிரபலமான ஒரு ஸ்லோகம் ஆகும். இதில் கர்மா என்பது ஒருவர் செய்யும் செயலை குறிக்கும். ஒரு செயலை செய்வதற்கு மட்டுமே உனக்கு உரிமை உண்டு. உனக்காக கொடுக்கப்பட்ட கடமையை நிறைவேற்றுவது மட்டுமே உன்னுடைய வேலை. ஆனால் அந்த செயலால் விளையும் பலனில் உனக்கு எவ்வித உரிமையும் கிடையாது. ஒரு செயலை செய்யும் போது அதன் பலன் என்னவாக இருக்கும் என்பதை யோசித்து, அதை நோக்கமாக கொண்டு உனது செயலை செய்யாதே.

அதே போல் உங்களின் செயல்களால் வரும் முடிவுகளுக்கு நீங்களே காரணம் என ஒரு போதும் நினைக்காதீர்கள். இந்த செயல் என்னை கருவியாக கொண்டு நடத்தப்பட்டது. எனக்காக நடத்தப்பட்டது என எதன் மீதும் பற்றற்ற நிலையிலேயே இருக்க வேண்டும் என கிருஷ்ணர் விளக்கி உள்ளார். பகவத் கீதையானது பரம்பொருளாக இறைவனே, நேரடியாக மனிதனுக்கு கூறியது.




# "சர்வதேச ஸ்ரீமத் கீதை மகோற்சவம் 2024"




இந்தியாவின் ஹரியானா மாநில குருப்பிரிவு அபிவிருத்தி சபையால் வருடாந்தம் நடத்தப்படும் பகவத்கீதை மகோற்சவம் இம்முறை இலங்கையில் நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 2024.03.01ஆம் திகதி முதல் 03ஆம் திகதி இம்மகோற்சவம் கொழும்பு 07யிலுள்ள தாமரைத் தாடக மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. புத்த சாசன சமய கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தலைமையில், கலாசார அமைச்சு, இந்து கலாச்சார திணைக்களம், இந்திய உயர் ஸ்தானிகராலயம் மற்றும் சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஆகியன இணைந்து சர்வதேச கீதை மகோற்சவத்தை ஏற்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவையொட்டி ரங்கோலி கோலம் போடும் போட்டி, ஓவியம் வரையும் போட்டி, ஆன்மீக உடைப் போட்டி என்பனவும் கலாசார நிகழ்ச்சிகள், மகாபாரத கதாபாத்திரங்களை சித்தரிக்கும் கலை நிகழ்ச்சிகள், புத்தகக் கண்காட்சி, கைவினைப் பொருட்களுக்கான கண்காட்சி மற்றும் பரிசளிப்பு விழா என்பன இடம்பெறவுள்ளன. 2024.03.01ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்நிகழ்வுகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. அன்று மாலை 6 மணிக்கு சிறப்பு ஹோமமும் அன்று இரவு 8 மணிக்கு மாபெரும் இசை நிகழ்ச்சியும் இடம்பெறும்.

2024.03.02ஆம் திகதி சனிக்கிழமை காலை தொடக்கம் மாலை வரை சர்வ மதத் தலைவர்கள் உள்ளடங்கலாக ஆய்வாளர்கள் மற்றும் புலமையாளர்கள் கலந்து கொள்ளும் மகாபாரத கருத்தரங்குகள் மும்மொழிகளில் மொழி பெயர்ப்பு வசதியுடன் இடம்பெறும். மாலை 5 மணிக்கு அரச உயர் மட்ட அதிகாரிகள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், இந்திய உயர் ஸ்தானிகர், ஆலய அறங்காவலர்கள் உள்ளடங்கலான முக்கிய பிரமுகர்களின் பங்களிப்புடன் பிரதான வைபவம் இடம்பெறும்.

அன்று இரவு ஏழு மணிக்கு வெள்ளவத்தை சைவ மங்கையர் கழக மாணவிகள் வழங்கும் சிறப்புக் கலை ஆற்றுகை நிகழ்ச்சியும் ஏனைய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். அன்று இசை நிகழ்ச்சியுடன் இரண்டாம் நாள் நிகழ்வு நிறைவடையும்.

2024.03.03ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை தொடக்கம் கைவினை கண்காட்சி, புத்தகக் கண்காட்சி மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும். அன்று மாலை 5 மணி தொடக்கம் யாகம் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சோபன யாத்திரா இடம்பெறும். சோபன யாத்ராவில் மகாபாரத கதைகளை பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய கதாபாத்திரங்களை உள்ளடக்கிய ஆற்றுகைகளோடு, கலை நிகழ்ச்சிகள் ஏனைய கண்ணைக் கவரும் கலாசார பண்பாட்டு அம்சங்கள் இடம்பெறும்.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 77



எவனொருவன் உகந்த செயல்களை செய்கிறானோ, கடவுளின் நோக்கத்திற்கிணங்க வாழ்க்கை நடத்துகிறானோ, அவனுக்குத் தான் தெய்வ கடாக்ஷம் கிட்டும். தூங்கிக் கொண்டு பொழுதை போக்கும் சோம்பேறிகளை தெய்வமும் வெறுக்கும். மனிதன் தெய்வ சக்திகள் அனைத்தும் பெற்றிட விரும்ப வேண்டும் என்று கடவுள் நினைக்கிறார். தெய்வ நம்பிக்கை இழந்தவனுக்காக இந்த உலகம் இயங்கவில்லை.

அசுர எண்ணம் கொண்ட அவர்களை இந்த பூமித்தாய் தன் மடியில் தாங்கிக் கொண்டுள்ளார். அவர்கள் வெளியேறும் காலம் வந்து விடும். அப்படி அவர்களை இயற்கை வெளியேற்றும் காலம் வெகு தொலைவில் இல்லை. அனலிடைப் பட்டவர்கள் போல் அவர்கள் துடிப்பது உறுதி. மயக்கம், பிரமை, சோம்பேறித்தனம் அறியாமை ஆகியவைகளை கைவிட்டு, விழிப்புணர்வை வரவழைத்துக் கொள்ளுங்கள். புனிதமான வெளிச்சத்தை நோக்கி முன்னேறுங்கள். அதன் மூலம் மனிதர்களாகிய நமக்கு சித்தி கிடைக்கும். மேலும் ஆன்ம லாபமும் உண்டாகும்.

இந்த தெய்வீக விழிப்புணர்வு எங்ஙனம் அமையும்? முதலில் நாம் நம் இயல்புகளை ஏற்றுக் கொள்வோம். நம்மை அந்த பரமபிதா, பராமத்மாவின் மைந்தர்கள், அவரின் பிரதிநிதிகள் என அனுபவ பூர்வமாக உணர்வோம். நம்மிடமுள்ள தீயகுணங்கள் அனைத்தும் தூக்கி எறிவோம். தீயகுணங்கள் அகன்றதும் நம் உள்ளத்தில் தெய்வீக தீப ஒளி பிரகாசித்து சுடர்விடும். உலகமே ஒளியமாக விளங்கும். தாம் எங்கும் பரவி அழகுற விளங்குகிறோம் என்ற உணர்வு மேம்படும். நாலாபுறமும் ஆனந்தம் சூழும். அமரத் தன்மை பெறும். வாழ்க்கை தெய்வீகத்தை நோக்கி முன்னேறும். கடவுள் படைப்பில் மனிதனை விட சிறந்த படைப்பு ஏதுமில்லை.

மனித ஆற்றல்களில் எண்ணத்தின் ஆற்றலுக்கு மிகுந்த வலிமையுண்டு. எண்ணத்தின் ஆற்றல் பெற்ற ஒருவன் லட்சக் கணக்கான மனிதர்களுக்கு தலைமை தாங்கி வழி நடத்த முடியும். எண்ணத்தின் ஆற்றல் கொண்ட ஒருவன்.

எவ்வித பயன்பாட்டு சாதனங்கள் இல்லாமலும் அவனால் முன்னேற்றக்கூடிய பாதையினை உருவாக்க முடியும், எண்ண ஆற்றலின் மூலமே பல மாமனிதர்கள் சமூகத்தையும் தேசத்தையும் நிர்மாணித்தனர். எண்ண ஆற்றல் கொண்டவனே வாழ்க்கை பந்தங்களிலிருந்து விடுபட்டு ஆன்மீகவாதியாக வலம் வர முடியும். எண்ணத்தின் ஆற்றலின் மூலம் தான் மகான்கள் பராமாத்வை உணர்ந்துள்ளனர்.

மனிதனின் வாழ்வை உருவாக்குவதற்கான வசதி செய்வதிலும் உருக்குலைய வைப்பதிலும் அவனது எண்ண ஆற்றல் முக்கிய பங்கு வகிக்கிறது. மனித வாழ்வு எண்ணங்களின் அடிப்படையில் தான் அமைகிறது. கெட்ட எண்ணங்களைக் கொண்டு ஒருவன் தன் வாழ்வை முன்னேற்றிக் கொள்ள முடியாது. அவர்கள் வெற்றி பெறுவது போல் காணப்பட்டாலும் வீழ்ச்சி அடைந்தே தீருவர்.



மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் மாசி மக உற்சவத்தை ஆலய கொடியேற்றத்துடன் ஆரம்பித்து தேர்த்திருவிழா நடைபெறும் வரை சிறப்பாக நடத்திய ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ சு. கிருஷ்ணகுமார் குருக்கள் உட்பட பூஜை வழிபாடுகளை சிறப்பாக நடத்திய சிவாச்சாரியார்களையும் படத்தில் காணலாம்.













மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் மாசிமக தேர்த்திருவிழாவையொட்டி தினகரன் வெளியிட்ட விஷேட மலர் அனுபந்தத்துடனான தினகரன் பத்திரிகைகளை ஆலய அறங்காவலர்களுக்கும் வர்த்தக பிரமுகர்களுக்கும் வழங்கும் போது பிடிக்கப்பட்ட படங்கள்.

(எம். சதுர்தீன், டி.வசந்தகுமார் மாத்தளை, நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்கள்)

## அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

19587 ) பெருமான் நாம் கண் இமைக்கும் பொழுது கூட நம் உயிரை விட்டுப் பிரியாமல் இருக்கின்றான் என்பதனை உணர்த்தும் வரிகள்?

"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான்"

19588 ) "இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" இந்த வரிகளை அருளியவர் யார்?

மாணிக்கவாசகர்

19589 ) நம் உடலில் தங்கி இருந்து நம் உடலை இயக்கும் பெருமான் எவ் வடிவில் உயிரிலும் உடலிலும் காத்து இருக்கின்றான் என்பதனை உணர்த்தும் வரிகள்?

"உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற மெய்யா"

19590 ) இந்த வரிகளை அருளியவர் யார்?

மணிவாசகப் பெருமான்

19591 ) இந்த வரிகளை எதில் அருளியுள்ளார்?

திருவாசகத்தின் சிவபுராணத்தில் குறிப்பிடுகின்றார்

19592 ) பொய் நீங்கிய உண்மைப் பொருளாய் இருக்கின்ற அப்பெருமான், மேல்நிலையை அடைய எம் உள்ளத்தில் எந்த வடிவாக இருக்கின்றான்?

ஓங்கார வடிவாக

19593 ) உள்ளத்துள் ஓங்காரமாய் நிற்றல் என்பதன் பொருள் என்ன?

பெருமான் ஒலி வடிவாகவும் ஒளி வடிவாகவும் நிற்றல் என்பதனைக் குறிப்பிடுவர்.

19594 ) இதனை வடமொழியில் எவ்வாறு குறிப்பிடுவார்?

நாத விந்து வடிவம்

19595 ) பெருமானின் மேலான நிலைகளை என்ன வடிவம் என்று குறிப்பிடுவர்? ஒலி, ஒளி

19596 ) மேலான ஒலியை என்ன என்று குறிப்பிடுவார்? சிவம் என்று

19597 ) மேலான ஒளியை என்ன என்று குறிப்பிடுவார்?

அச்சிவத்தின் சத்தி என்று குறிப்பிடுவர்

19598 ) இதனை வரி வடிவில் எவ்வாறு கூறுவார்கள்?

அகரம் எனவும் உகரம் எனவும் குறிப்பிடுவர்.

19599) இதனையே தமிழ் எண்கள் அடிப்படையில், "எட்டும் இரண்டும் அறியாத என்னை, எட்டும் இரண்டும் அறிவித்தான் என் நந்தி"என்று யார் கூறியுள்ளார்? திருமூலர்.

## கச்சதீவு புனித அந்தோனியார்...

ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையரின் பங்கேற்புடன் யாழ் மறைமாவட்ட ஆயர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது.

வருடாந்தம் இலங்கை, இந்திய யாத்திரிகர்களின் பங்கேற்புடன் நடைபெறும் இத்திருவிழாவில், இம்முறை இலங்கைத் திருப்பயணிகள் மட்டுமே கலந்து கொண்டனர். பல்வேறு காரணங்களின் நிமித்தம் இந்திய திருப்பயணிகள் இம்முறை திருவிழாவில் கலந்து கொள்ளவில்லையென தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் பிரதிநிதியாக ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இம்முறை திருவிழாவில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டிருந்தார்.

கச்சதீவு புனித அந்தோனியார் திருத்தல திருவிழா 21ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானதுடன் அதனைத் தொடர்ந்து தவக்காலத்தையொட்டி திருச்சிலுவைப் பாதை தியானம் நடைபெற்று வெஸ்பர்ஸ் ஆராதனையும் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து நேற்றுக் காலை 8.00 மணியளவில் யாழ், மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் அருட் தந்தையர்களின் பங்கேற்புடன் நிறைவேற்றப்பட்டது. ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்க நாயக்க, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, கடற்படையின் யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி காஞ்சனா பானுகொட, இந்திய உயர்ஸ்தானிகராலய பிரதிநிதி உள்ளிட்ட அரசாங்க அதிகாரிகள் மற்றும் கத்தோலிக்க மதத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அருட் பணியாளர்கள் பெருமளவில் திருவிழா நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

திருவிழா திருப்பலியில் மறையுரையாற்றிய யாழ் மறை மாவட்ட குரு முதல்வர் அருட்திரு ஜெபரட்ணம் அடிகளார் தமது உரையின் போது இலங்கைக்கும் இந்தியாவுக்கும் உறவுப் பாலமாக வுள்ள புனித கச்சத்தீவு அந்தோனியார் திருத்தலத்தின் திருவிழாவை பல்வேறு காரணங்களை குறிப்பிட்டு இந்திய சகோதரர்கள் புறக்கணித்தமை கவலைக்குரியது.

திருவிழாவில் அவர்கள் கலந்து கொள்ளாவிடினும்,அவர்களின் உள்ளங்கள் திருவிழாவை ஏற்றுக்கொண்டிருக்கும்.ஆகவே அவர்களையும் மனதில் கொண்டு திருப்பலி ஒப்புக் கொடுக்கிறோம் என தெரிவித்தார்.

கச்சத்தீவு புனித அந்தோனியார் திருத்தல வருடாந்த தேர்த்திருவிழா நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. அதனை தொடர்ந்து தவக்காலத்தையொட்டி சிலுவைப் பாதை தியானம் நடைப்பெற்றதுடன். வெஸ்பர்ஸ் ஆராதனையும் இடம்பெற்றது. அதனை தொடர்ந்து காலை 08.00 மணியளவில் திருவிழா திருப்பலி கூட்டுத் திருப்பலியாக யாழ்.மறை மாவட்ட குரு முதல்வர் அருட் திரு ஜெபரட்னம் அடிகளார் தலைமையில் ஏனைய அருட்தந்தையர்களின் பங்கேற்புடன் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இலங்கையையும், இந்தியாவையும் எந்த விதத்திலும் பிரித்துப் பார்க்க முடியாது.இரு நாட்டு மக்களும் பெரும் சகோதர உறவைக் கொண்டவர்கள் என்றும் இனிவரும் திருவிழாக்களில் அவர்களும் கலந்து கொள்ள வேண்டும் என நாம் வேண்டுதல் செய்வோம் என்றும் குரு முதல்வர் மறையுரையில் தெரிவித்தார். இந்த திருவிழாவில் இலங்கையில் பல்வேறு பகுதிகளிலுமிருந்து 5000 ற்கும் மேற்பட்ட திருப்பயணிகள் கலந்துக் கொண்டார்கள். சுமார் 120 படகுகள் திருப்பயணிகளை ஏற்றிக்கொண்டு கச்சதீவை வந்தடைந்திருந்தன.

திருவிழா கொண்டாட்டங்கள் அனைத்தும் வழமை போன்று இம்முறையும் இடம்பெற்றது.அத்துடன் கடற்படைத் தளபதி வைய்ஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா,கடற்படையின் யாழ்.மாவட்ட கட்டளைச் தளபதி காஞ்சன பானுகொட, இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் பிரதிநிதி உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள், அருட் தந்தையர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். திருவிழாவின் இறுதி நிகழ்வாக கொடி இறக்கத்துடன் புனித அந்தோனியாரின் திருச் சொரூப இறுதி ஆசிர்வாதத்துடன் திருவிழா நிகழ்வுகள் நிறைவு பெற்றன.

## ஜே.வி.பி, ஐ.ம.சவுக்கு...

முன்னோக்கி செல்கிறதென புதிய கூட்டணியின் ஸ்தாபகரான பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்துள்ளார். நாட்டை கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்துடன் 'புதிய கூட்டணி' முன்னோக்கி செல்வதாகவும் நிமல் லான்சா தெரிவித்துள்ளார். கொழும்பு, ஹைட் பார்க் மைதானத்தில் (24) நடைபெற்ற புதிய கூட்டணியின் இரண்டாவது பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா இக்கருத்தை வெளியிட்டார். இங்கு மேலும் கருத்து தெரிவித்த நிமல் லான்சா,

புதிய கூட்டணி, வாக்குறுதிகளை அளிக்கும் ஒன்றல்ல, இது ஒரு வேலைத்திட்டத்துடன் முன்னோக்கி செல்லும் பயணமாகும். வாக்குறுதிகளை கொடுத்து ஆட்சிக்கு வந்ததாலேயே 70 வருடங்களாக இந்நாடு அழிந்தது. வாக்குறுதிகளை அளித்து ஆட்சிக்கு வந்ததும், கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற கடன் வாங்க வேண்டியிருந்தது. இல்லையெனில், பணத்தை அச்சடிக்க வேண்டியிருந்தது. வாக்குறுதிகளை நிறைவேற்ற பணமில்லை.கடன் வாங்கி பணத்தை அச்சிட்டதால் நாடு அழிந்தது. எனவே இந்த புதிய கூட்டணியின் முக்கிய நோக்கம் மக்களுக்கு உண்மையை கூறுவதாகும். சத்தியத்தை பேசுவது, மக்களுக்கு யதாத்தத்தை புரிய வைப்பதாகும். அவ்வாறு அல்லாமல் பொய் கூறுவதல்ல. திருடர்கள் பிடிபட்டால் பொருளாதாரம் உயருமென ஜே.வி.பி மேடைக்கு மேடை ஏறி கூறி வருகிறது. திருடர்களை பிடிக்க 201 5இல் FCID அறிமுகப்படுத்தப்பட்டது . அவ்வாறான ஒரு திருடனும் பிடிபடவில்லை.மீண்டும் அநுரகுமார வேலைத் திட்டம் எதனையும் முன்வைக்கமாட்டார்.

ம றுபுறம், ஐ.ம.ச. தலைவர் தொடர்ச்சியாக வாக்குறுதிகளை அளித்து வருகிறார். வாக்குறுதிகளை வழங்க உங்களிடம் பணம் இருக்கிறதா? பணம் இல்லை. இந்நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு, பொருளாதார வேலைத்திட்டத்தை முன்வைப்பதைத் தவிர வேறு எந்த வழியிலும் பணம் தேட முடியாது. மரங்களிலிருந்து பணத்தை பறிக்க முடியாது. மந்திரத்தால் கூட பெற முடியாது. பொருளாதார திட்டம் கட்டாயமாக வகுக்கப்பட வேண்டும். ஜே.வி.பி.யின் மேடைகளில் ஒரு கலைஞரை அழைத்து வந்து பாடலைப் பாட வைத்தவுடன், ஒரு நடிகையை வரவழைத்து புராணக் கதை சொல்ல வைத்தால், அது ஒரு பெரிய வேலை என்று நினைக்கிறார்கள். அண்மையில் ஒரு மேடையில், 100 பெண்கள். 200 மார்பகங்கள் என சொல்கிறார்கள். என்ன சொல்கிறார்கள் இவர்கள்? அசிங்கமாக பேசுகிறார்கள். விபச்சாரத்தை சட்டப்பூர்வமாக்க வேண்டும். கொழும்பில் இருந்து காலி வரை மார்பகங்களைக் காட்டிக் கொண்டு நடக்க வேண்டும் என்கிறார்கள். இவை வேலைத்திட்டங்கள் அல்ல. நாட்டை கட்டியெழுப்ப வேலைத்திட்டத்தை முன்வைப்பது அவசியம். நாங்கள் வரும் போது கொடுப்போமென ஐ.ம.சவினர் சொல்கிறார்கள். இருந்தால் கொடுங்கள். கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுக்க வேண்டும். தகுதியற்றவர்களுக்கு வழங்கிப் பயனில்லை. அதை தகுதியானவர்களுக்கு வழங்க வேண்டும். அப்படி நடந்தால் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். வீழ்ந்த குழிக்குள்ளேயே மீண்டும் நாட்டை கொண்டு செல்ல அனுமதிக்க முடியாது. உண்மையையும் யதார்த்தத்தையும் சொல்லி மக்களை எம் பக்கம் இழுக்க வேண்டும். அவ்வாறின்றி நாட்டை கட்டியெழுப்ப முடியாது. இனிவரும் காலத்தில் நாட்டை எவ்வாறு முன்னோக்கி கொண்டு செல்வது என்பதே, எமது கூட்டணியின் பிரதான சவாலாகும். மார்ச் மாதத்தில், இந்த நாட்டில் மிகப்பெரிய கூட்டணி உருவாகவுள்ளது. அனைத்து இடதுசாரி மற்றும் முற்போக்கு மக்களும் இந்தக் கூட்டணியை நோக்கி ஒன்றிணையுமாறு கேட்டுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். எம்முடன் இணையவுள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன, ஐ.ம.ச. கட்சி ஆதரவாள்ர்களை எம்மைச் நோக்கி அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். ஒரு வேலைத்திட்டம் நாட்டுக்கு முன்வைக்கவுள்ளோம், பொய்யான அரசியல் வாக்குறுதிகள் அல்ல. நாம் மிகப்பெரிய கூட்டணியை உருவாக்கி மே மாதத்தில் இலட்சக்கணக்கான மக்களை கொழும்புக்கு அழைத்து வருவோம். முடிந்தால் மக்களை ஒன்று திரட்டுமாறு மக்கள் விடுதலை முன்னணிக்கும், ஐ.ம.சவுக்கும் சவால் விடுக்கின்றோம். நாம் தற்போது ஆரம்பித்தது மாத்திரமே. முதலாவது ஜாஎலவில் வைத்தோம். இரண்டாவது ஹைட் பார்க்கில், மூன்றாவது அம்பாந்தோட்டையில், நான்காவது பதுளையில். ஐந்தாவது மொணராகலையில் வைக்கவுள்ளோம்.

மே மாதம் முதல் 160 தொகுதிகளிலும் மக்களை ஒன்றிணைத்து, கூட்டம் கூட்டமாக எமது கூட்டணியை நோக்கி பாரிய மக்கள் கூட்டத்தை ஒன்றிணைப்போம். பொய் சொல்லி, மக்களை ஏமாற்றி, பொய்யான வாக்குறுதிகளை கொடுப்பதால் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. வருமானம் ஈட்டுவது எப்படி என்று சொல்ல வேண்டும். செலவைக் குறைக்கும் முறையைக் குறிப்பிட வேண்டும். மக்கள் அனைத்துப் பல்கலை மாணவர்களின் கதைகளைக் கேட்க விரும்புகிறார்கள். பல்கலை மாணவர்கள் ஆட்சியமைக்க செல்லவுமில்லை. ஆட்சியமைக்க போவதுமில்லை. வாய்வீச்சாளர்களும் இவர்களைப் போன்றவர்களே. குரைக்கும் நாய்களை அடக்கிய இந்தியாவுக்கு சல்யூட் அடிக்க வேண்டும். 40 ஆண்டுகளாக அரசியல் தலைவர்கள் சிறந்த முடிவுகளை எடுக்க முயன்ற போது, அதையெல்லாம் சீர்குலைத்தது யார்? மக்கள் விடுதலை முன்னணி. அந்த மக்கள் விடுதலை முன்னணி, 40 ஆண்டுகளுக்குப் பின்னர் தற்போது வந்து இந்தியா மாறிவிட்டது, நாமும் மாற வேண்டும் என்று சொல்கிறது. அன்று தலைவர்கள் சொன்னதை ஏற்றுக் கொள்ள, இவர்களுக்கு 4050 ஆண்டுகள் சென்றுள்ளன. தற்போது எமது தலைவர்கள் சொல்வதை இவர்கள் ஏற்றுக் கொள்ள இன்னும் 50 ஆண்டுகள் செல்லும். அநுரகுமாரவுக்கு சர்வதேச தொடர்புகள் இருப்பதாக சமூக வலைத்தளங்களில் கூறப்படுகின்றது. இந்தியா சென்று 05 நாட்கள் ஒரு வார்த்தை கூட பேசவில்லை. அநுரகுமாரவுக்கு யெஸ், நோ என்றுதான் சொல்ல முடியும் என, ஜா எல சந்திப்பில் நான் கூறினேன். இந்தியா சென்ற பிறகு, நோ என்று கூற தெரியவில்லை என்று தெரிந்து கொண்டேன். இந்திய விஜயத்தின் போது அவர் எந்தவொரு உரையும் மேற்கொள்ளவில்லை. விஜயத்தின் 05 நாட்களும் புகைப்படங்கள் மட்டுமே இருந்தன. இந்தியா ரெகோர்டிங்கை நிறுத்தி வைத்துள்ளது. ஏனென்றால் பேசுவதற்கு மொழி தெரியாது. பேசியவற்றை இங்கே போட்டிருந்தால் இருக்கும் கொஞ்ச வாக்குகளும் இல்லாமல் போய் விடும். இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற வேண்டுமென் நாம் அன்றிலிருந்து கூறி வருகிறோம். இந்தியாவுடன் இணைந்து பணியாற்ற முடியாது என்று இவர்கள் தான் கூறினர். சம்பூரை எதிர்த்தார்கள். எட்காவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்தனர். இந்தியாவில் இருந்து மக்கள் பொருட்களை கொண்டு வந்தால் கொலை செய்தனர். தீ வைத்தார்கள். அவ்வாறான ஒரு கடந்த காலம் ஒன்றும் உள்ளது.

இப்போது வந்து, டெண்டர் போட்டால் பரவாயில்லை என்கிறார்கள். அரைக்கு அரைவாசி கொடுத்தாலும் பரவாயில்லை. ஆனால் இந்திய பரவலாக்கத்தின் எதிர்ப்பு காரணமாக இறந்தவர்கள் எத்தனை பேர்? ஆனால் இப்போது 50 வருடங்கள் கழித்து 5050 தான் சிறந்தது என்று புரிந்து கொண்டுள்ளனர். உலகின் தலைசிறந்த தொழிலதிபர்களை கொண்டு வர ஏனைய நாடுகளுடன் நாம் போட்டியிட வேண்டும் என்பதை இன்னும் 50 வருடங்களில் தான் அவர்கள் புரிந்து கொள்வார்கள். அந்த தொழில்நுட்பத்தை கொண்டு வர ஆதரவளிக்க வேண்டும். அவ்வாறின்றி அவர்கள் இலங்கைக்கு வரமாட்டார்கள். அவர்கள் தெரிவு செய்ய மேலும் நாடுகள் உள்ளன. இது வர்களுக்கு புரியாது. இவற்றைப் புரிந்து கொள்ள இவர்களுக்கு இன்னும் 50 ஆண்டுகள் செல்லும். ஜேவிபிக்கு வேலைத்திட்டம் கிடையாது. வாய்வீச்சாளர்களுக்கும் வேலைத்திட்டம் கிடையாது. பொய்யர்களுக்கும் திட்டம் எதுவுமில்லை. ஜோக்கர்களுக்கு நாட்டை கட்டியெழுப்ப முடியாது. இந்த நாட்டை கட்டியெழுப்ப ஒரு வேலைத்திட்டத்தை முன்வைக்க வேண்டும். தவறான கூட்டங்களில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

ஒரு திட்டத்துடனேயே இந்த கூட்டணி முன்னோக்கி செல்கிறது என்ற செய்தியை நாம் நாட்டுக்கு தெரிவிக்க விரும்புகிறோம். நாம்பொய் சொல்லவில்லை. மக்களுக்கு உண்மையைச் சொல்கின்றோம். மக்களுக்கு யதார்த்தத்தை புரிய வைக்கிறோம். நாம் சொல்வதைக் கேட்காமல் மக்கள் வேறு குழுவினர்களைக் கொண்டு வந்தால் மூன்று அல்லது ஆறு மாதங்கள்தான் அவர்கள் இருப்பார்கள். மக்கள் கல்லெறிந்து விரட்டியடிப்பார்கள் என்று எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அதற்கு முன்னுதாரணத்தையும் நாம் கண்டுள்ளோம். அநுரகுமாரவினால் ஆட்சிக்கு வர முடியாது. அதனாலேயே ஒரு திட்டத்தை கூறுகிறார் இல்லை. ஆட்சிக்கு வருவது என்றால் வேலைத்திட்டம் ஒன்றை சொல்வார்கள் தானே. ஆனால் அவர்கள் தினமும் போராட்டம் நடத்தவே விரும்புகிறார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் பதவியே வேண்டும். அதுதான் ஒரு திட்டத்தை சொல்கிறார்கள் இல்லை. சஜித்துக்கும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி வேண்டும். நாமல் ராஜபக்ஷவும் எதிர்க்கட்சித் தலைமைப் பதவியை விரும்புகிறார். எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு அநுரகுமார, சஜித் பிரேமதாஸ, நாமல் ராஜபக்ச ஆகிய மூவரும் மோதிக் கொள்கின்றனர். இவர்கள் அதிகாரத்தை கைப்பற்ற விரும்பினால், ஜனாதிபதி பதவியை எடுக்க விரும்பினால், அவர்கள் வேலைத்திட்டத்தை முன்வைக்க வேண்டும்." என நிமல் லான்சா இங்கு மேலும் தெரிவித்தார்.

## GCE A/L பரீட்சைக்கு...

நிலையங்களைப் பயன்படுத்தி இப்பயிற்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இவ்வருடம் சாதாரண தரப் பரீட்சை முடிவடைந்த பின்னர், பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கும் இது போன்ற பயிற்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டுள்ளதா கவும் அமைச்சர் கூறினார். அண்மையில் வாராபிட்டிய பாடசாலை பிரதேசத்தில் ஊட்டப் பாடசாலைகளுக்கான வள விநியோகத் திட்டத்தில், பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இரு நூறுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளுக்கு பாடசாலை பைகள், பாடசாலை உபகரணப் பொதிகள், பாடசாலை காலணி வவுச்சர்கள், அப்பியாச கொப்பிகள் வழங்கப்பட்டன. வாராப்பிட்டிய மகா வித்தியாலயம், ஹந்துகல மகா வித்தியாலயம், மற்றும் கெகிரியோபட மகா வித்தியாலயங்களுக்கு இரண்டு மின்சார துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்பட்டன. இப் பிரதேசத்தில் உள்ள மேலும் ஆறு பாடசாலைகளுக்கு மின்சார துவிச்சக்கரவண்டிகளும், விளையாட்டு உபகரணங்களும் வழங்கப்பட்டன. பாடசாலைக்கு வரும் அனைத்து ஆசிரியர்களும் தகவல் தொழிநுட்ப அறிவைப் பெற்றிருக்க வேண்டும் எனவும் தற்போது ஒவ்வொரு பிரதேசத்திலும் நிறுவப்பட்டுள்ள கணினி வள நிலையங்களின் உதவியுடன் ஆசிரியர்களுக்கு பயிற்சியளிக்கும் பாரிய வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். எதிர்வரும் மே மற்றும் ஜுன் மாதங்களில் க.பொ.த சாதாரணத் தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள ஒரு இலட்சம் மாணவர்கள் பரீட்சைக்குப் பின்னர் இந்தப் பயிற்சியை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

## நாட்டில் 04 பொலிஸ்...

காணப்படவில்லை. பேலியகொடை 04 ஆம் மைல் கல்லுக்கு அருகில் பட்டியசந்தி பகுதியில் ரயிலில் மோதுண்டு உயிரிழந்த 35 வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. இவர் வெள்ளை மற்றும் கறுப்பு நிறத்திலான சட்டை மற்றும் கறுப்பு நிறத்திலான காற்சட்டை அணிந்துள்ளார். வலது கையில் பச்சை குத்தியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## ஹம்பாந்தோட்டை துறைமுக...

ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை மியன்மார் துறைமுகத்துடன் இணைக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், அதனை கிழக்கு சீனாவின் சோங்கிங் துறைமுகம் வரையில் விரிவுபடுத்தி பின்னர் ஆபிரிக்கா வரை மேலும் விரிவுபடுத்த எதிர்பார்க்கப்படுவதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி, ஹம்பாந்தோட்டையை நாட்டின் பிரதான பொருளாதார மையமாக மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளையும் சுட்டிக்காட்டினார். கிழக்கு மற்றும் ஹம்பாந்தோட்டை நகர அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக அண்மையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனை சுட்டிக்காட்டினார். கொழும்பு நகரம் உட்பட மேல் மாகாணம், கிழக்கு மாகாணம் மற்றும் ஹம்பாந்தோட்டையில் சுற்றுலா வலயங்கள் தொடர்பான மூலோபாய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நகர அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டதுடன் புதிய முதலீட்டு வாய்ப்புகளும் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

## குளத்தில் டிராக்டர் விழுந்து...

உள்பட 24 பேர் நீரில் மூழ்கி பலியாகினர். உத்தரபிரதேஷ் காதர்கஞ்ச் பகுதியிலுள்ள கங்கை நதியில் புனித நீராடுவதற்காக பக்தர்கள் சென்றபோதே, இவ்விபத்து ஏற்பட்டது.

உத்தரப் பிரதேசத்தின் காஸ்கஞ்ச் மாவட்டத்தில் நேற்று டிராக்டர் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்திலுள்ள குளத்துக்குள் விழுந்து விபத்துக்குள்ளானது.

## குருதி டயாலிசிஸ்...

மருத்துவமனை நிர்வாகம் நடவடிக்கை எடுத்தாலும் உறுதியான காரணத்தை கண்டுபிடிக்க முடியவில்லை என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இது தொடர்பில் சுகாதார அமைச்சும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. இதன்படி, டயாலிசிஸ் மற்றும் இரத்தம் செலுத்துவதில் நிபுணத்துவம் பெற்ற இரண்டு வைத்தியர்களைக் கொண்ட விசாரணைக் குழுவை நியமிக்க சுகாதார அமைச்சின் செயலாளர் டொக்டர் பாலித மஹிபால நடவடிக்கை எடுத்துள்ளார்.

## இந்திய உயர்ஸ்தானிகருடன்...

தமிழக மீனவர்களின் அத்துமீறல் நடவடிக்கையால் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்படுவதுடன் கடல் வளமும் அழிக்கப்படுவது குறித்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உயர் ஸ்தானிகரிடம் தெளிவுபட எடுத்துரைத்தார்.

மீனவர்கள் பிரச்சினையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஆக்கபூர்வமான அணுகுமுறையைக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை ஒப்புக்கொண்டதுடன் இருதரப்பிலும் உள்ள மீனவர்களின் நலனுக்காக மனிதாபிமான முறையில் இது தீர்க்கப்பட வேண்டுமென உயர்ஸ்தானிகர் வலியுறுத்தினார்.

## மாணவர்களை இலக்கு வைக்கும்...

பகுதிகளில் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடுபவர்களை கைது செய்வதே எமது இலக்காகும். எதிர்காலத்தை பொறுப்பேற்கவுள்ள குழந்தைகளின் எதிர்காலத்தை இருளில் ஆழ்த்தும் வேலையையே இவர்கள் செய்வதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார். பொரலந்த பொலிஸ் கெடட் பிரிவின் புதிய பயிற்சி நிலையத்தை திறந்துவைக்கும் நிகழ்வு பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் உரையாற்றிய போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

## ஒரு இலட்சம் மாணவர்களுக்கு...

நோக்கமாகும். ஒவ்வொரு பாடசாலையிலும் மிகக்குறைந்த வசதிகளின் கீழ் கல்வி கற்கும் திறமையான மாணவர்களைத் தெரிவு செய்து, அந்தப் பிள்ளைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் மாணவர்களுக்கு தொடர்ச்சியான பாடசாலைக் கல்வியை வழங்கப்படவுள்ளது. இதனூடாக நாட்டின் மனித வளத்தை மேம்படுத்த முதலீடு செய்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எதிர்பார்ப்பாகும். இப் புலமைப்பரிசில் பெறுவோரைத் தெரிவு செய்யும் செயல்முறை மற்றும் இது தொடர்பான அனைத்து தகவல்களும் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் தளத்தில் www.facebook.com/president.fund ஊடாக விரைவில் அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

## இன்றைய பலன்கள்

### (26.02.2024)

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:** நண்பர்களால் ஏற்பட்ட மனக்கசப்பு விலகும். பிரிந்த உறவினர்கள் ஒன்றிணைய வாய்ப்புண்டு. உத்தியோகத்திற்கு எதிர்பார்த்து இட மாற்றம் பதவி உயர்வு கிடைப்பது அரிது.

**ரிஷபம்:** சகோதரர்களிடையே இருந்த பகை மறையும். வேற்று மொழி பேசும் ஒருவர் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் அலுவலக விஷயமாக எந்த நன்மைகளையும் எதிர்பார்க்க முடியாது.

**மிதுனம்:** துன்பங்கள் வந்தாலும் அதை சமாளிக்கும் ஆற்றல் பிறக்கும். நீண்ட காலமாக வராத உறவுகள் இப்போது உங்களை தேடி வரக்கூடும்.

**கடகம்:** நீதிமன்ற வழக்குகள் சிறு திருப்பத்தை உண்டாக்கும். எதிர்பார்த்த விஷயங்கள் வெற்றி பெற போராட வேண்டியது இருக்கும்.

**சிம்மம்:** உங்கள் முயற்சியால் சில பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பீர்கள். நண்பர்களின் சந்திப்பு நல்ல பலன் தரும்.

**கன்னி:** எதிர்பாராத நன்மைகளும் தொல்லைகளும் ஏற்படக்கூடும். பயணத்தின் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த இட மாற்றம் பதவி உயர்வு கிடைக்கும்.

**துலாம்:** எழுத்து துறையில் உள்ளவர்களும் பத்திரிகை துறையில் உள்ளவர்களும் சில திருப்பங்களை சந்திப்பபீர்கள். பணம் கொடுக்கல் வாங்கலை தொழிலாக செய்வார்கள்.

**விருச்சிகம்:** நன்மைகளும் தொல்லைகளும் கலந்தே நடைபெறும். வெளிநாட்டில் இருந்து ஒரு நல்ல செய்தி வந்து சேரலாம்.

**தனுசு:** சிறுசிறு தொல்லைகள் காணப்படும். அதே நேரம் சில நற்பலன்களும் உண்டு. ராணுவம் காவல்துறையில் பணிபுரிபவர்களுக்கு அலைச்சல் அதிகரிக்கும்.

**மகரம்:** எந்த காரியத்தை செய்ய நினைத்தாலும் மறைமுக தடைகள் தேடி வருவது போல் தோன்றும் விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள்.

**கும்பம்:** எதிலும் நிதானத்தை கடைபிடிப்பது நல்லது. உத்தியோகத்தில் உள்ளவர்கள் அலுவலகம் தொடர்பான விஷயங்களில் எந்த விதமான நன்மைகளையும் எதிர்பார்க்க முடியாது.

**மீனம்:** வெளிநாட்டு பயணத்திற்கு முயற்சித்தவர்களுக்கு தடை உருவாகும். சிலர் புதிய தொழில் தொடங்குவதற்கு செய்த முயற்சி கை கூடும்.

## ஐக்கிய குடியரசு... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

அரசியல் பேதமின்றி நாட்டிற்கான பொதுவான வேலைத்திட்டத்தில் இணையுமாறு அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் விடுத்துள்ள திறந்த அழைப்பையும் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டத்தில் ஏனைய அரசியல் கட்சிகளின் அனைத்து சாதகமான முன்மொழிவுகளையும் உள்ளடக்குவதற்கு தயங்கமாட்டேன் எனவும் தெரிவித்தார். வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான சர்வதேச நாணய நிதியத்துடன் அடுத்த மாதம் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் ஏனைய அரசியல் கட்சிகளும் பங்கேற்க சந்தர்ப்பம் வழங்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி நல்ல பதிலை வழங்கினார். தேர்தலை நடத்துவது தொடர்பிலான கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதித் தேர்தல் குறித்த நேரத்தில் நடத்தப்படுமெனவும், அடுத்த வருட ஆரம்பத்தில் பொதுத் தேர்தலை நடத்த எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவரும், காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான ருவன் விஜேவர்தன, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கேபண்டார ஆகியோரும், ஐக்கிய குடியரசு முன்னணியின் சார்பில் கரு பரணவிதான, நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க, சட்டத்தரணி ஷிரால் லக்திலக ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## ரஷ்ய, உக்ரைன் பயணிகளை...

இச்சுற்றுலாப் பயணிகளுக்கு முன்னர் வழங்கப்பட்ட விசா நீடிப்புகளை இரத்துச் செய்ய இலங்கை அரசாங்கம் உத்தியோகபூர்வமாக முடிவு செய்யவில்லை என்றும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

## 2023 இல் சுமார்...

கடன் அடிப்படையில் புதிய இணைப்புகளை வழங்குவதற்கான பொறிமுறையை உருவாக்கவும், மின் கட்டணத்துடன் முழு இணைப்புக் கட்டணத்தையும் தவணை முறையில் செலுத்த அறிவுறுத்தப்பட்டுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## இலங்கையர் இருவரை...

தப்பிச் செல்ல முயன்றுள்ளனர். கடந்த வருடம் ஜனவரி (30) கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த "மெர்க்ஸ் யூனிகார்ன்" என்ற கப்பலில் ஏற்றப்பட்ட வெற்று கொள்கலனுக்குள் இருவரும் இரகசியமாக நுழைந்துள்ளனர். கப்பல் மலேஷியாவை சென்றடைந்தபோது, அந்த கொள்கலனில் பதுங்கியிருந்த இருவரையும் ஏற்றுக்கொள்ள மலேஷியா மறுத்தது. பின்னர், இலங்கையருடன் கப்பல் சீனாவை சென்றடைந்தபோது இவர்கள் இருவரையும் சீன அதிகாரிகள் கைது செய்தனர்.

26 வயதான மதி ராஜேந்திரன் மற்றும் 39 வயதான ஜெயக்குமார் தர்மராசா ஆகியோரே நாடு கடத்தப்பட்டனர்.

## தாமதத்துக்கு தொழிற்சங்க நடவடிக்கை...

காரணம் எனவும், எந்தவொரு தொழிற்சங்க நடவடிக்கையுமல்ல எனவும் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் வலியுறுத்தியுள்ளது. சோதணை கரும பீடங்களில் செயல்பாடுகள் தற்போது இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளதாகவும், தாமதத்தால் சிரமத்திற்குள்ளான தனது பயணிகளிடம் மன்னிப்புக் கோருவதாகவும் விமான நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேவேளை, அவ்வாறானதொரு நிலை இனிமேலும் ஏற்படாமல் தடுக்கும் முயற்சியில் ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் ஈடுபட்டுள்ளது.

நேற்று (25) காலை ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸிற்கு சொந்தமான 04 விமானங்கள் தாமதமாக புறப்பட்டதாகவும், களப்பணியாளர்கள் சில பணிகளை செய்யாமல் தவிர்த்ததால் இந்த தாமதம் ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பலாலி உயர்பாதுகாப்பு...

வழிபாடுகளை நடத்துவதற்கு அனுமதி வழங்க இலங்கை இராணுவம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி கட்டுவன் அருள்மிகு முத்துமாரி அம்மன் கோயில், வசாவிளான் மணம்பிறை கோயில், வசாவிளான் சிவன் கோயில், வசாவிளான் நாக கோயில், பலாலி இராஜ இராஜேஸ்வரி அம்பாள் கோயில், பலாலி நாக தம்பிரான் கோயில், பலாலி சக்திவெளி முருகன் கோயில் என்பவற்றில் வாராந்தம் பூஜைகள் செய்ய பொதுமக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தகோயில்களில் மாதாந்த பூஜைகள் மற்றும் நைமித்திய பூஜைகளுக்கு இதற்கு முன்னரும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.இருந்த போதிலும், ஆலய பரிபாலன சபையினர் மற்றும் சிவில் அமைப்புக்கள் விடுத்த கோரிக்கைகளை பரிசீலித்த பாதுகாப்பு அதிகாரிகள், வாராந்த பூஜைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

எவ்வாறாயினும், கடந்த வெள்ளிக்கிழமை (23) ஆரம்பமான வாராந்த பூஜையில் 291 பொதுமக்கள் பங்கேற்பதாக தெல்லிப்பளை பிரதேச செயலகம் யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைத் தலைமையகத்துக்கு அறிவித்திருந்த போதிலும், 50 பேரே இதில் கலந்து கொண்டனர்.

# மத்திய கல்லூரி உட்பட அறிவார்ந்த கல்லூரிகளின் வளர்ச்சிக்காக என்றும் அறம் சார்ந்தே நிற்பேன்!



## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

மத்திய கல்லூரி உட்பட அறிவார்ந்த கல்லூரிகளின் வளர்ச்சிக்காக என்றும் அறம் சார்ந்தே நிற்பேன்! கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழ் தேசத்தின் கல்லூரிகள் எல்லாமே நிமிர்ந்தெழவேண்டும்,.. இதுவுமே என் நோக்கும் இலட்சியமும்,.. ஆனாலும், யாழ் மத்திய கல்லூரி எனக்கு என் இரத்தமும் தசையும் போன்றது,..நான் இந்த கல்லூரியின் பழைய மாணவன் என்பதற்காக எனது அரசியல் அதிகாரங்களை ஒருபோதும் தவறாக பயன்படுத்தியதில்லை பயன்படுத்தப் போவதுமில்லை,..

நான் தேடிக்கொண்டிருந்தது சிறந்த அதிபர், சிறந்த நிர்வாகி,.. அது பெண்ணாகவும் இருக்கலாம், ஆணாகவும் இருக்கலாம்,,

அழிவு யுத்த காலத்தில் அச்சம் தரும் சூழலில் வராது வந்த அதிபர் நாயகமாக யாழ் மத்திய கல்லூரியில் வந்தமர்ந்தவர் அமரர் இராசதுரை அவர்கள், இடிந்தும் சிதைந்தும் இருந்த யாழ் மத்திய கல்லூரியை மறுபடி தூக்கி நிறுத்திய அவரது சாதனைகளுக்கு உந்து கோலாக நான் இருந்திருக்கிறேன் என்று சாட்சியம் கூற அதிபர் இராசதுரை இன்று உயிருடன் இல்லை,..

ஆனாலும் சாட்சியம் கூற இன்றும் வரலாற்று மனிதர்கள் உள்ளனர். தமிழ் தேசியம் என்ற ஒற்றைச்சொல் மந்திரத்தின் பெயரால் அதிபர் இராசதுரை என்ற ஆளுமை இல்லாமல் ஆக்கப்பட்டார். அதிபர் இராசதுரைக்கு அடுத்து நான் கண்ட சிறந்த நிர்வாக திறன் மிக்கவர் அதிபர் இந்திரகுமார். இவரை விடவும் ஆற்றல் உள்ளவர் ஒரு பெண்ணாக இருப்பினும் அவரையே நான் சிபார்சு செய்திருப்பேன். இங்கு பெண், ஆண் பிரச்சினை அல்ல. பிரதானம், ஆளுமையும் ஆற்றலும் மிக்கவர்களே எமக்குத் தேவை.

அதிபர் இராசதுரையை தமிழ் தேசியத்தின் பெயரால் கொன்றொழித்து அகற்றியது போல் அதிபர் இந்திரகுமாரை பெண்ணியத்தின் பெயராலும் சாதியத்தின் பெயராலும் உயிருடனே அகற்ற முற்படும் ஈனச்செயல்களுக்கு இடமளிக்க வேண்டாம்.

பெண்ணியம் பற்றி, பெண்கள் உரிமைகள் பற்றி நாம் தெளிவான நிலைப்பாட்டை கொண்டவர்கள். ஆற்றல் உள்ளவர்கள் பெண்கள் என்றும், ஆயுதம் எந்த வேண்டும் அவர்கள் என்றும் நடை முறையில் நிரூபித்தவர்கள் நாம், இயக்கத்தில் இணையும் பெண்களை சீருடை தைக்கவும், மருத்துவம் பார்க்கவும், சமையல் அறையில் இருத்தவும் சிலர் வகுத்திருந்த பழைய பாரம்பரியங்களை உடைத்து, முதன் முதலில் ஆயுதம் தரித்த பெண்களாக ஆண்களுக்கு நிகராக அவர்களை நிறுத்தியவர்கள் நாங்கள்.

ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் களப்பலியான பெண் போராளி எனது சகோதரி சோபா. இலங்கை அரசின் தேசியக்கொள்கையில்தேர்தலில் பெண்களின் பிரதிநித்துவம் 25 வீதமாக இருப்பினும், எமது கட்சிக் கொள்கையில் பெண்களின் பிரதிநித்துவம் ஐம்பதுக்கு ஐம்பது என்ற சமத்துவக் கோட்பாட்டை கொண்டவர்கள் நாம்.

ஆகவே ஆளுமை மிக்க பெண்களை உருவாக்கவும் அரச உயர் பதவிகளில் அவர்களை உட்கார வைக்கவும் நாம் ஒருபோதும் பின்நின்றதும் இல்லை பின்நிற்க ப்போவதில்லை.

அநீதியான புறக்கணிப்புகளும் பாகுபாடுகளும் எங்கு நடக்கின்றதோ அதற்கு எதிராகவே என்றும் நாம் உறுதியுடன் நிற்பவர்கள்.

ஒளிவிடும் அறிவுச் சுடர்களை உருவாக்கித் தந்த யாழ் மத்திய கல்லூரியின் நீடித்த வளர்ச்சிக்கு உறுதியுடன் உழைப்போம் வாருங்கள்.

யாதும் ஊரே, யாவரும் கேளிர் என்ற சமத்துவக் கோட்பாட்டில் சகலரும் ஒன்று படுவோம்!

ஊடகப் பிரிவு:

# வடக்கின் உதயம்

## தேராவில் குளத்தின் மேலதிக நீர் பிரமந்தனாறு குளத்திற்கு

**முல்லைத்தீவு குறூப் நிருபர்**

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட உடையார்கட்டு தெற்கு தேராவில் குளத்தில் இருந்து மேலதிக நீரினை வெளியேற்றும் வேலைத் திட்டம் நேற்று தொடங்கப்பட்டது. இந்நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் அ.உமாமகேஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், முல்லைத்தீவு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர், முல்லைத்தீவு கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர், வனவளத் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டனர். தேராவில் குளத்திலே கூடுதலான நீர் தேங்கி நிற்பதன் காரணமாக 17 குடும்பங்கள் பாதிக்கப்பட்டு உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவு மற்றும் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு இருக்கின்றன. குளத்தில் இருந்து மேலதிகமான நீர் பரந்தன், முல்லைத்தீவு வீதியினை வெட்டி அமைக்கப்படும் வாய்க்கால் மூலம் பிரமந்தனாறு குளத்திற்கு தேராவில் குளத்தின் மேலதிக நீர் கொண்டு செல்லப்படவுள்ளது.

ந. கிருஸ்ணகுமார்



கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தராகப் பணியாற்றி இளைப்பாறுகை பெற்ற வதனி கேதாரநாதனின் மணிவிழா கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது கலாசாலையின் முன்னாள் அதிபர்கள், விரிவுரையாளர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டு இளைப்பாறுகை பெற்ற வதனி.


## கேள்வி அறிவித்தல்

### கட்டாக்காலி மாடுகளை பிடித்து அடைத்து வைத்தல்

ஹப்புத்தளை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் அலைந்து திரியும் கட்டாக்காலி மாடுகள் கிட்டத்தட்ட 40ஐ பாதிப்பேற்படாதவகையில் பிடித்து ஹப்புத்தளை பிரதேச சபைக்குச் சொந்தமான தியத்தலாவ நகரின் பொது மைதானத்தில் அடைத்து வைத்தல் மற்றும் மாடுகள் பிடிக்கப்பட்ட தினத்தில் இருந்து 14 நாட்கள் அந்த மாடுகளை பராமரிப்பதற்காக 2024.02.26 முதல் 2024.03.05 வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. கேள்வி விண்ணப்பங்கள் விநியோகிக்கும் இறுதித் திகதி 2024.03.04 பி.ப. 3.00 ஆவதுடன் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல் 2024.03.05 மு.ப. 11.00 இற்கு முடிவடைவதுடன், முடிவடைந்தவுடன் உடனடியாக கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும்.

**கவனிக்கவும்:**

1. ஒரு மாட்டைப் பிடிப்பதற்கான விலைமனுக்களை வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.
2. ஒருநாள் ஒரு மாட்டை பராமரிப்பதற்கான விலைமனுக்களை வேறுவேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024.03.05 மு.ப. 11.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது ஹப்புத்தளை பிரதேச சபை நிறுவனத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் கொண்டுவந்து உள்ளிடலாம்.

**மேலதிக விபரங்களுக்கு:**
Web: www.haputhaleps.com/hapuprasa@yahoo.com
FB :HaputhalePradeshiyasabha
T.P. :0572229075/ 0572050037














கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாத் திருப்பலி நிகழ்வு யாழ். மறை மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளாரின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்பட்டது. கொடியேற்றத்தை அடுத்து சிலுவைப் பாதை, நற்கருணை ஆராதனை மற்றும் திருச்சொரூப பவனி ஆகியன இடம்பெற்றன. இத்திருவிழாவிற்கு இலங்கையில் இருந்து 4000 வரையான பக்தர்களே வருகை தந்ததுடன் இந்திய பக்தர்கள் எவரும் பங்கேற்கவில்லை. மேலும் இவ் வரலாற்றுச் சிறப்பு மிக்க இந் நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் அ.சிவபாலசுந்தரன், இலங்கை கடற்படை தளபதி பிரியந்த பெரேரா, கடற்படை உயரதிகாரிகள், யாழிற்கான இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், பொலிஸ் உயரதிகாரிகள் மதகுருமார்கள், பக்தர்கள் என பலரும் பங்கேற்றனர். இத்திருவிழாவில் பக்தர்களின் நலன் கருதி சுகாதார வசதிகள் போக்குவரத்து ஒழுங்குகள், உணவு வசதிகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டன. *(பருத்தித்துறை விசேட நிருபர்)*

# சிறந்த 10 பாடசாலைகளில் வடக்கில் இருந்து மூன்று பாடசாலைகள் தெரிவு

**வவுனியா விசேட நிருபர்**

இலங்கையின் சிறந்த 10 பாடசாலைகளில் வடக்கில் இருந்து மூன்று பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், தேசிய பாடசாலையான வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் திறைசேரியின் அங்கீகாரத்துடன் இலங்கையில் சிறந்த 10 பாடசாலைகளில் ஒன்றாக தரமுயர்த்தப்பட்டுள்ளது.

இந்த தரம் உயர்வின் மூலம் பாடசாலையின் அதிபராக வலயக்கல்விப் பணிப்பாளருக்கு சமனான எச்எல்ஈஎஸ் தரம் ஒன்று உத்தியோகத்தர் காணப்படுவதோடு, பிரதி அதிபர்களாக மூவர் எஸ்எல்ஈஎஸ் தரம் மூன்று உத்தியோகத்தர்களும் கடமையாற்றுவார்கள்.

வடமாகாணத்திலேயே பிரதி அதிபர் பதவிக்கு மூன்று எஸ்எல்ஈஎஸ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளமை இப் பாடசாலைக்கு மட்டுமே ஆகும்.


## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

### பால் பவுடரை வழங்குவதற்கான கேள்வி

**(Tender for the supply of Milk Powder)**

**Tender No.: Q 74/24**

பால் பவுடரை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை 2024.03.14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் இப்போது அழைக்கின்றார்.

விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் ஊடாக நடாத்தப்படும்.

பால் பவுடரை வழங்குவதில் விலைமனுதாரர்கள் உற்பத்தியாளர்களாக/ முகவர்களாக/ இறக்குமதியாளர்களாக / விநியோகஸ்தர்களாக இருக்கலாம்.

2024.03.13 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் சாதாரண வேலை நாட்களில் வழங்கல் பிரிவிலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுதாரர்கள் எழுத்துமூலமான விண்ணப்பமொன்றையும் 3,500 ரூபாவை மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக செலுத்தி ஸ்ரீ ஜயவர்தனபுர வைத்தியசாலையின் கணக்காளரினால் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுடன் ஆவணத்தை பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08 ஆம் பந்தியின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் (சமாகம் மெதுர) வழங்கப்பட்ட பதிவுச் சான்றிதழொன்றும் (பிரதியொன்றுடனான சான்றிதழின் மூலப்பிரதி) விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

உரிய முறையில் விலைமனுக்கோரல் ஆவணமானது இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என அடையாளமிடப்பட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் **"Supply of Milk Powder – Q 74/24 – closing on 2024.03.14"** என அடையாளமிடப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2024.03.14 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான சமர்ப்பிப்புக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

விலைமனுதாரர் 30,000 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்றை விலைமனுவுடன் வழங்குதல் வேண்டும்.

பெற்றுக் கொள்ளப்பட்ட விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே வைத்தியசாலையின் மாநாட்டு மண்டபத்தில் திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதியானவர் இந்நிகழ்வின் போது சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய, நுகேகொட.**
**தொலைபேசி: 0112778624**



## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

### திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 122,500 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 பெப்ரவரி 28ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124E314 | LKA18224H306 | LKA36425B284 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 35,000 | 47,500 | 40,000 | 125,500 |

ஏல விற்பனைத் திகதி : 2024 பெப்ரவரி 28
தீர்ப்பனவுத் திகதி : 2024 மார்ச் 01
வழங்கப்படும் திகதி : 2024 மார்ச் 01
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 பெப்ரவரி 28 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) மற்றும் அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள்

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பேங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**







# இலங்கையின் கல்வி, பொருளாதார, சமூக மேம்பாடுகளில் குவைத் அரசின் வகிபாகம்

குவைத் நாடு அரேபிய தீபகற்பத்தில் பாரசீக வளைகுடாவின் (அரேபிய வளைகுடா) வடமேற்குப் பகுதியின் எல்லையில் அமைந்துள்ளது.

ஈராக் மற்றும் சவூதி அரேபியாவின் எல்லையாக குவைத் அமைந்துள்ளது. மேலும், அது ஈரானுடன் கடல் எல்லைகளை பகிர்ந்து கொள்கிறது. பல தீவுகள் குவைத்திற்கு சொந்தமானது. மிகப் பெரிய தீவுகளான புபியான், வர்பா மற்றும் ஃபைலாகா தீவுகள் நிலப்பரப்பின் கரையோரத்தில் அமைந்துள்ளன.

17,818 கிமீ$^2$ பரப்பளவைக் கொண்ட குவைத்தில் 4.5 மில்லியன் மக்கள் வாழ்கின்றனர் (2020இன் தகவல்) மூன்றில் ஒரு பங்கு குவைத் நாட்டவர்கள் மற்றவர்கள் வெளிநாட்டினர். தலைநகரம் குவைத் (நகரம்). பேச்சு மொழி ; அரபு, குவைத்தில் அதிகாரபூர்வ மதம் இஸ்லாம். குவைத் வளைகுடா ஒத்துழைப்பு கவுன்சிலின் (ஜிசிசி) ஆறு உறுப்பு நாடுகளில் ஒன்றாகும். மற்றும் அரபு நாடுகளின் லீக்கின் உறுப்பு நாடாகும்.

பெயரளவில் ஒட்டோமான் பேரரசின் ஒரு மாகாணம் 16 ஆம் நூற்றாண்டிலிருந்து 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி வரை கான்ஸ்டான்டினோப்பிளில் (இன்று இஸ்தான்புல்) ஆட்சி செய்தது.

1899. நவம்பர் 23இல் ஷேக் முபாரக் கிரேட் பிரிட்டனுடன் ஆங்கிலோ குவைத் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார். இந்த ஒப்பந்தம் குவைத்தை ஒரு தன்னாட்சி பிரிட்டிஷ் பாதுகாவலராக நாட்டிற்கு அரை தன்னாட்சி அந்தஸ்துடன் நிறுவியது.

1930 களின் நடுப்பகுதியில் குவைத் அதன் பெட்ரோலியத் தொழிலின் வளர்ச்சியை ஆரம்பித்தது. இது நாட்டின் நவீன செழிப்பின் ஆரம்பமாகும். 1961 ஜூன் 19இல், குவைத் பிரிட்டனிடமிருந்து முழு சுதந்திரம் பெற்றது. 1963 இல் அது ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக பதிவானமை குறிப்பிடத்தக்கது.

குவைத் தனது எண்ணெய் உற்பத்தியை குறைக்க மறுப்பதன் மூலம் ஈராக்கை பொருளாதார ரீதியாக பாதிக்கிறது என்று கூறி, 1990 ஆகஸ்ட் 02ஆம் திகதியன்று குவைத்தை ஈராக் ஆக்கிரமித்தமை குவைத்தின் இறையாண்மைக்கு பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இதனால் குவைத் நாட்டு மக்கள் சவூதி அரேபியா மற்றும் பிற நாடுகளுக்கு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. பல வாரங்கள் வான்வழி குண்டுவீச்சுக்கு பின் அமெரிக்கா தலைமையிலான 30 மாநிலங்களின் சர்வதேச கூட்டணியானது, 1991 பெப்ரவரி 23 அன்று தரைவழி தாக்குதலைத் தொடங்கியது. நான்கு நாட்களில் குவைத்தை முழுமையாக விடுவித்து, குவைத் 1990 – 91ல் சேதமடைந்த எண்ணெய் உள்கட்டமைப்பை சரிசெய்வதற்கு சுமார் 5 பில்லியனுக்கும் அதிகமாக செலவிட்டுள்ளது

பெரும்பாலான வரலாற்றாசிரியர்களின் பொதுவான கருத்து என்னவென்றால், குவைத்தின் நவீன வரலாறு 18 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தொடங்கியது. அல் அனிசா பலங்குடியினர் மத்திய அரேபியாவில் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட தாயகமான நஜ்தில் இருந்து வளைகுடாவின் வடக்கு கரைக்கு குடிபெயர்ந்தன. இந்த குடியேற்றவாசிகள் ஒன்றிணைந்து ஒரு தன்னல வணிகக்குழுவொன்றை உருவாக்கினர். அதன் பொருளாதார செழிப்பு மீன்பிடித்தல், முத்து மற்றும் வர்த்தகத்தை அடிப்படையாகக் கொண்டது. இறுதியில் அல் சபா ஆதிக்கம் செலுத்தும் குலமாக உருவானது. மேலும் 1756 இல் ஆட்சியமைப்பு முறையாக நிறுவப்பட்டது. இருப்பினும், 1613 இல் குவைத்தின் அடித்தளத்தை உறுதிப்படுத்தும் புதிய சான்றுகள் வெளிச்சத்திற்கு வந்தன. அது குவைத்தின் வரலாற்றையே மாற்றியமைத்தது எனலாம். உண்மையில், ஷேக் முபாரக் அல்சபா 1913 ஆம் ஆண்டு மார்ச் 5 ஆம் திகதி குவைத் எல்லைகளைத் தெளிவுபடுத்த பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு அனுப்பிய கடிதத்தின் தொடக்கத்தில் அவர் பின்வருமாறு கூறுகிறார்:

'குவைத் எங்கள் தாத்தா 1613 இல் குடியேறிய பாலைவனமான நிலம்' . இதே திகதியை ஆசிரியர் முகமட் பென் ஒத்மானின் வரலாற்று நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், கர்னல் பில்லி 1863 ஆம் ஆண்டு ஜூலை 16 ஆம் திகதி தனது குவைத் விஜயத்தைப் பற்றி தனது அறிக்கையில் பின்வருமாறு எழுதினார்: 'சமீபத்திய ஷேக்கின் குடும்பம் குவைத்தை ஐந்து

தலைமுறைகளாக, அதாவது 250 ஆண்டுகளாக ஆட்சி செய்கிறது. அவர்களின் தலைமுறை எங்களுடையதை விட இரண்டு மடங்கு அதிகமாகும்.

1899 ஒப்பந்தத்தின் கீழ், குவைத் அதன் உள் விவகாரங்களில் கட்டுப்பாட்டைப் பராமரித்தது. அதேநேரம், கிரேட் பிரிட்டன் நாட்டின் பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு உறவுகளுக்கான பொறுப்பை ஏற்றுக்கொண்டது. 1922 மற்றும் 1923 இல் நிறுவப்பட்ட குவைத்தின் எல்லைகள் மற்றொரு பிரிட்டிஷ் மரபு ஆகும். ஈராக் குவைத்துடனான தனது எல்லையை 1932 ஆம் ஆண்டு 'லீக் ஆஃப் நேஷன்ஸிடம்' ஒரு சுதந்திர நாடாக உறுப்பினராக்குவதற்கான விண்ணப்பத்தில் உறுதி செய்தது.

**பெற்றோலியத் துறையின் வளர்ச்சி :**

1930 களின் நடுப்பகுதியில் குவைத்தின் பெற்றோலியத் தொழிலின் வளர்ச்சியில் ஆரம்பமாகியது. இது நாட்டின் நவீன செழிப்புக்கு அடிப்படையாகும். எண்ணெய் வளம் முதன்முதலில் 1938 இல் குவைத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் தொழில்துறையின் வளர்ச்சி இரண்டாம் உலகப் போரால் குறுக்கிடப்பட்டது. 1945 பெரிய அளவில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டது.

மேலும் கச்சா எண்ணெயின் வணிக ஏற்றுமதி ஜூன் 1946 இல் தொடங்கியது.

எண்ணெய் உற்பத்தி மற்றும் வருவாய்கள் வேகமாக வளர்ந்தன. முழுப் பொருளாதாரத்தின் வியத்தகு விரிவாக்கத்திற்குத் அது தூண்டியது. 1960 களில் குவைத் பொருளாதார வளர்ச்சியின் மட்டத்தை உயர்வடைந்தது.

அது தனிநபர் அடிப்படையில் உலகின் பணக்கார மாநிலங்களில் ஒன்றாக மாறியது.

**முழுமையான சுதந்திரம் :**

1961 ஜூன் 19இல் குவைத் என்ற நாடு பிரிட்டனிடம் இருந்து முழு சுதந்திரம் பெற்றது. ஈராக் ஆரம்பத்தில் குவைத்தின் சுதந்திரத்தை ஏற்க மறுத்தது. மற்றும் குவைத் ஒரு காலத்தில் ஈராக்கின் ஒரு பகுதியாக இருந்ததாக பொய்யாக குற்றம் சாட்டி அதன் அண்டை நாடுகளை இணைத்துக்கொள்ள அச்சுறுத்தியது. ஈராக்கின் இராணுவ அச்சுறுத்தல்களால் பிரிட்டிஷ் துருப்புக்கள் நிலைநிறுத்தப்பட்டன. அவை விரைவில் அரபு லீக் படையால் மாற்றப்பட்டு நெருக்கடி மேலும் தணிந்தது. 1963ஆம் ஆண்டு குவைத் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினரானது. அந்த ஆண்டின் பிற்பகுதியில் ஈராக் அதன் அச்சுறுத்தல்களைக் கைவிட்டு குவைத்தின் சுதந்திரம் மற்றும் எல்லைகளை இரு அரசாங்கங்களும் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தில் அங்கீகரிக்க ஒப்புக்கொண்டது. (1973 இல் எல்லை மோதல்கள் இருந்தபோதிலும்) நவம்பர் 1994 இல் குவைத்தின் இறையாண்மையையும் ஐ.நாவால் வரையறுக்கப்பட்ட எல்லையையும் ஈராக் முறையாக ஏற்றுக்கொண்டது. ஆயினும் கூட ஈராக் ஆக்கிரமிப்பின் போது ஏற்பட்ட சொத்துக்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு சேதம் விளைவிப்பதற்காக பகுதியளவு இழப்பீடு மட்டுமே வழங்கியது.



**அஷ்ஷெய்க் மிஷ்அல் அல் அஹமட் அல் ஜாபிர் அல் சபாஹ்**
(குவைத் மன்னர்)

## குவைத்தின் 63ஆவது தேசிய தினம் இன்றாகும்

**இலங்கை குவைத் இராஜதந்திர உறவு: சுருக்கமான வரலாறு;**

இரு நாடுகளுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ இராஜதந்திர உறவுகள் 1971 பெப்ரவரி 19 முதல் ஆரம்பமாகின.

இலங்கையில் குவைத் நாட்டின் தூதரகம் 1995 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

குவைத்தில் உள்ள இலங்கை தூதரகம் 1981 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

குவைத் வர்த்தக அமைச்சர்கள் இருவரின் இலங்கை விஜயத்தின் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மேலும் வலுவடைந்தது.

குவைத்தின் முன்னாள் வர்த்தக அமைச்சர் ஜாசிம் அல் முஸீப், 1997 இல் இலங்கைக்கு மரியாதை நிமித்தமாக வருகை தந்தார். அதே போல் 2007 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் செய்த பலாஹ் ஃபஹாத் அல் ஹாஜிரியின் விஜயம் பல்வேறு துறைகளில் ஒரு மைல்கல்லாக அமைந்தது.

இலங்கைக்கான தனது விஜயத்தின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கான மேலதி வழிகளை ஆராய வேண்டியதன் அவசியத்தை அவர் கோடிட்டுக் காட்டினார்.

இலங்கைக்கும் குவைத்துக்கும் இடையிலான வர்த்தக பரிமாற்றத்தின் அளவு 2 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது. 2004 இல் இலங்கையில் இருந்து

குவைத்துக்கான ஏற்றுமதியின் பெறுமதி 20 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் இறக்குமதியின் பெறுமதி 22 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் எட்டியது.

தேயிலை, இறப்பர், தேங்காய் விதைகள், கொட்டைகள், புதிய காய்கறிகள், மசாலா மற்றும் பாதாம் உள்ளிட்ட இலங்கை தயாரிப்புகள் குவைத்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு அங்குள்ள சந்தையில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளன. குவைத் நாட்டுக்கு தேயிலையை ஏற்றுமதி செய்யும் முக்கிய நாடாக இலங்கை காணப்படுகிறது. அண்மைய சந்தை அறிவிப்பின்படி 54 வீத குவைத் மக்கள் இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் சுவையான தேயிலையை அதிகம் விரும்புபவர்களாக காணப்படுகின்றனர்.

குவைத்தில் இருந்து முக்கிய இறக்குமதிகளான பாலித்தீன், கனிமங்கள், கட்டுமானப் பொருட்கள் மற்றும் கண்ணாடியிழை, 1750 பீப்பாய்கள் கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயுவும் எமது நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டில், பிளாஸ்டிக் மற்றும் இறப்பர்கள் ($15.9M), கனிமப் பொருட்கள் ($9.24M), மற்றும் இரசாயனப் பொருட்கள் ($1.38M) ஏற்றுமதியில் குவைத் இலங்கையுடன் ஒரு பெரிய நிகர வர்த்தகத்தைக் கொண்டிருந்தது போல், 2021 ஆம் ஆண்டில் காய்கறிப் பொருட்கள் ($14.1M), தைத்த ஆடை ($8.72M), மற்றும் உணவுப் பொருட்கள் ($3.98M) ஏற்றுமதியில் குவைத்துடன் இலங்கை பங்கெடுத்தன.





**குவைத் அரசிடமிருந்து இலங்கைக்கு நிதி உதவி :**

இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் வகையில் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்க குவைத் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, இலங்கையில் காளான் வளர்ப்பு நிறுவனத்தை ஊக்குவித்தல், வடக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அதிகம் தேவைப்படும் குழந்தைகளுக்கு பாடசாலைக்கு செல்வதற்கு பைகள் மற்றும் புத்தகங்கள் வழங்கல், தென் கிழக்கு பல்கலைக் கலகத்திற்கு நான்கு மாடி கட்டடம் அமைப்பது உள்ளிட்ட பல திட்டங்களுக்கு குவைத் அரசு நிதியுதவி வழங்கியுள்ளது.

**இலங்கையின் கல்வி வளர்ச்சியில் குவைத் :**

குவைத் அரசாங்கத்தின் அங்கீகாரம் பெற்ற இலங்கையின் தொண்டு நிறுவனமான அல்ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பினூடாக இலங்கையிலுள்ள அரசாங்க பாடசாலைகளின் இடப்பற்றாக்குறைகளை நிவர்த்திக்க இதுவரை நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள 30க்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு வகுப்பறை கட்டடங்கள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல், பாடசாலைகளுக்கு தேவையான தளபாடங்கள் உட்பட இன்னோரன்ன பொருட்கள் எமது நாட்டின் கல்வித்துறை மேம்பாட்டிற்காக வேண்டி குவைத் அரசினாலும் குவைத் நாட்டின் தொண்டு நிறுவனங்களினாலும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளமையை இச்சந்தர்ப்பத்தில் நன்றியோடு நினைவு கூர்கிறேன். அதேபோன்று எமது நாட்டு மக்களுக்கு சுத்தமான குடிநீரை வழங்கும் நோக்கில் வரட்சி நிலவிய பல பகுதி மக்களின் தேவையை கருத்திற்கொண்டு அவர்களுக்கு குவைத் அரசின் நிதியுதவியில் எமது அல்ஹிமா அமைப்பினூடாக தெரிவு செய்யப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு அவர்களுக்கு சுத்தமான குடிநீர் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளமையையும் இங்கு குறிப்பிட்டே ஆக வேண்டும். இதனால் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் மிகவும் பயனடைந்துள்ளமை விசேட அம்சமாகும். அதேபோல் குவைத் நாடு எமது நாட்டிற்கு பல வகையிலும் பல்வேறு உதவிகளை மேற்கொண்டுள்ளதோடு தொடர்ந்தும் எமது நாட்டுக்கு பல உதவிகளையும் தொடர்ந்து வழங்க முன்வந்துள்ளமையை இச்சந்தர்ப்பத்தில் பாராட்டுவதோடு இலங்கையிலுள்ள குவைத்தூதரகம்மேற்கொண்டுவருகின்ற தன்னலமற்ற பணிகள் தொடர்ந்தும் எமது நாட்டிற்கு கிடைக்கப்பெற்று நாடு சகலதுறைகளிலும் அபிவிருத்தி காணவேண்டுமென இச்சந்தர்ப்பத்தில் பிரார்த்திக்கிறேன்.













**அஷ்ஷெய்க் எம்.ஏ. நூறுல்லாஹ் (நளீமி)**
(பணிப்பாளர், அல் ஹிமா இஸ்லாமிய சேவைகள் அமைப்பு)



கலாநிதி மொஹமட் சாலிஹீன் எழுதிய "வளிமண்டலவியல் ஓர் அறிமுகம்" எனும் நூல் வெளியீட்டு விழா ஞாயிற்றுக்கிழமை (25) இலங்கை வளிமண்டலவியல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நூலின் முதல் பிரதியை நூலாசிரியரிடமிருந்து இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் பெறுவதையும் அருகில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம். ஜவ்பர் நிற்பதனையும் பாராளுமன்ற உறுப்பினர் ரிசார்ட் பதியுதீன் நூலின் கௌரவ பிரதி ஒன்றினை பெற்றுக் கொள்வதையும் படத்தில் காணலாம்.

# தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தில் சுற்றிவளைப்பு 43 சந்தேக நபர்கள் கைது

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

தம்புத்தேகம பொருளாதார மத்திய நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது ஹெரோயின், ஐஸ் போதைப்பொருள்,கேரள கஞ்சா என்பனவைகளை வைத்திருந்தவர்கள் மற்றும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தவர்கள் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 43 சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக தம்புத்தேகம தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சுற்றிவளைப்பு கடந்த (21) காலை 5.45 தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டதுடன் இதற்காக 120 பொலிஸாரும் 15 புலனாய்வு பிரிவினரும் ஈடுபட்டிருந்தனர்.



குறித்த சுற்றிவளைப்பின் போது ஹெரோயின் போதைப்பொருள் 04 பொதிகள், 03 ஐஸ் போதைப்பொருள் பொதிகள் மற்றும் 02 கேரளா கஞ்சா பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் கைது செய்யப்பட்டவர்களினுள் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த ஐவரும் இருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

முன் அறிவித்தல் எதுவுமின்றி திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்த சுற்றிவளைப்பின் போது பொருளாதார மத்திய நிலையத்திற்கு உட்செல்லும் வெளிச்செல்லும் வாயில்களில் சோதனை மேற்கொண்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

# ஈசிகேஷ் மூலம் ஹெரோயின் விநியோகம்; மூவர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

ஈசி கேஷ் மூலம் ஹெரோயின் போதைப் பொருளினை விநியோகித்துவந்த பெண் சந்தேக நபர் உள்ளிட்ட மூவரை அநுராதபுரம் வலய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய கடந்த 20ஆம் திகதி பகல் அநுராதபுரம் பொலிஸ் பிரிவின் சிராவஸ்திபுர பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது பெண் சந்தேக நபர் உள்ளிட்ட மூவரை கைது செய்துள்ளதுடன் பெண் சந்தேக நபரிடமிருந்து 08 கிராமும் 250 மில்லி கிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருட்களையும் ஆண் சந்தேக நபர்கள் இருவரிடமிருந்து 06 கிராமும் 150 மில்லி கிராமும் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.


இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல் (IFB)

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அனைத்து அஸ்போல்ட் ஆலைக்கு Aggregate Materials வழங்குவதற்கான விலைமனுக்கோரல்**

| இல. | விபரம் | Aggregate அளவு (mm) | மொத்த அளவு (ஒவ்வொரு ஆலைக்காகவும்) |
|---|---|---|---|
| 01. | அனைத்து அஸ்போல்ட் ஆலைகளுக்கும் Aggregate Material வழங்குவதற்கான (இங்கிரிய, கேரகல, கொட்டதெனியாவ, மெதயாய, கொத்மலை, பலாங்கொட, மதவாச்சிய, சூரியவெவ,பொலன்னறுவை) | 0-5 mm | 11,250 |
| | | 5mm-12.5mm | 6,750 |
| | | 12.5mm- 19mm | 4,500 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து அஸ்போல்ட் ஆலைகளுக்கும் Aggregate Materials வழங்குவதற்காக தேசிய போட்டி ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.02.26** ஆம் திகதி முதல் **2024.03.18** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

SELACINE


# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



"அறிவால் உலகை ஆள்வோம், அறிவார்ந்த சமூகமே எமது இலக்கு" எனும் தொணிப்பொருளில் புத்தளம் பீ.சீ.எம்.எச். நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்களை வழங்கும் நிகழ்வு கரைத்தீவு சேராக்குழி சிங்கள வித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து சிறப்பித்தார். பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் ஆசிரியர் எச். அமீர் அலி, பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் கரைத்தீவு பிரதேச இணைப்பாளர் முஹம்மது சமான் ஆகியோருடன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்திருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம் இதன் போது மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

# காட்டு யானை தாக்குதலில் பெண்ணொருவர் உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

பொலன்னறுவ வெலிகந்த முத்துவெல்ல பகுதியில் இடம்பெற்ற காட்டு யானையின் தாக்குதலில் மனைவி உயிரிழந்துள்ளதோடு கணவன், மகன் ஆகியோர் சிறுகாயங்களுடன் உயிர்தப்பியுள்ளதாக வெலிகந்த பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிகந்த பொலிஸ் பிரிவின் முத்துவெல்ல பகுதியிலுள்ள வயல் நிலமொன்றில் நேற்று 25 ஆம் திகதி அதிகாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். 41 வயதுடைய முத்துவெல்ல வெலிகந்த பகுதியை வசிப்பிடமாக கொண்ட பெண் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; வயல் நிலமொன்றில் அறுவடை செய்வதற்கு தயார் நிலையிலுள்ள வேளாண்மையினை காட்டுயானைகளின் அழிவுகளில் இருந்து பாதுகாப்பதற்காக வேண்டி வயல் நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த கொட்டிலில் தனது கணவன் மற்றும் மகனுடன் தங்கி இருந்த போதே அதிகாலை வேளையில் வயல் நிலத்துக்குள் புகுந்த காட்டுயானை பெண்ணை தாக்கியுள்ளதுடன் கொட்டிலையும் சேதப்படுத்தியுள்ளமை தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை வெலிகந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்


# வாகனங்கள் விற்பனைக்கு

| வாகன இல. | வகை | மாதிரி | வருடம் |
|---|---|---|---|
| **கார்** | | | |
| KN -1XXX | TOYOTA | CAMRY | 2007 |
| **கெப்** | | | |
| LA -5XXX | TATA | 207 DI | 2005 |
| **லொறி** | | | |
| LD -2XXX | MITSUBISHI | KK-FE53EE | 2001 |
| LG -7XXX | TATA | LPT1613 | 2009 |
| LI -2XXX | TATA | LPT1109 | 2011 |
| PT -3XXX | TATA | ACE-EX | 2012 |
| PW -6XXX | TATA | ACE EX2 | 2013 |
| **டிப்பர்** | | | |
| HI -7XXX | ISUZU | ELF | 1998 |
| LD -0XXX | MITSUBISHI | DUMP TRUC KK-FE51CBD | 2002 |
| LF -8XXX | LANKA ASHOK LEYLAND | COMETIPPER | 2007 |
| LN -3XXX | LANKA ASHOK LEYLAND | 1616 | 2017 |
| **முச்சக்கர வண்டிகள்** | | | |
| GE -4XXX | BAJAJ | BAJAJ AUTO | 2000 |
| HR -9XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2003 |
| HX -1XXX | BAJAJ | AUTO RE2 STROKE | 2004 |
| JK -7XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2004 |
| QA -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2005 |
| QE -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QF -1XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QF -8XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QH -5XXX | BAJAJ | AUTO RE 2 STROKE | 2006 |
| QO -0XXX | PIAGGIO | APE | 2008 |
| QP -1XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QQ -7XXX | BAJAJ | AUTO AR4S | 2008 |
| QV -3XXX | BAJAJ | BAJAJ 4 S | 2009 |
| YD -8XXX | BAJAJ | AR4S-UG | 2010 |
| YE -4XXX | BAJAJ | AR RE200 | 2010 |
| YI -3XXX | BAJAJ | RE205 | 2010 |
| AAC -2XXX | BAJAJ | RE205 | 2012 |
| AAW -4XXX | BAJAJ | RE | 2015 |
| ABN -2XXX | BAJAJ | RE | 2016 |

வாகன பரிசீலித்தல்களுக்கு:
**மெர்கன்டைல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பீஎல்சீ**
வாகன முற்றம் - இல.176, வாவி வீதி, மஹரகம.
தொ.பேசி : 0112 088 505

**வாகன பரிசீலித்தல்களுக்கான திகதிகள்**

E-mail adzsuo@gmail.com

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண சபை

## ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம்

ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் பின்வரும் வேலைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின் (CIDA) பதிவைக் கொண்ட தகைமைவாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து போட்டி ரீதியிலான விலைக்கோரலின் ஊடாக ஒப்பந்தக்காரர்களைத் தெரிவு செய்வதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனுக்கள் வழங்குதல் - 2024.02.26ஆம் திகதி முதல் 2024.03.18ஆம் திகதி வரை

விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் - 2024-03-18ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை

விலைமனுக்கள் திறக்கப்படுதல் - 2024.03.18ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு

ஊவா மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் https://roaddept.up.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்தில் குறித்த வேலைகளை உள்ளடக்கிய விளம்பரம் பிரசுரிக்கப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறிவிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் இயைபுடைய நிபந்தனைகள் மற்றும் அறிவுரைகளை பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு அல்லது குறித்த பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தைத் தொடர்புகொண்டு (இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது) பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கம் - வீதி அபிவிருத்தித் திணைக்களம் 055-2229626 / 055-2225570

இணையதளம் - https://roaddept.up.gov.lk

**தலைவர்,**
**அமைச்சு / திணைக்கள பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களம்,**
**ஊவா மாகாண சபை கட்டிடத்தொகுதி,**
**ரஜ வீதி, பதுளை.**
2024-02-22.

---

## தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம் – களுத்துறை

### வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்கிப் பொருத்துதல் 2024

### கேள்விக்கான அழைப்பு

களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகத்தின் பிரதேச பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வளிச்சீராக்கி இயந்திரங்களுக்கான Invetor மொடல்களை வழங்கி பொருத்துவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | கொள்வனவு | தேவைப்படும் இயந்திர அளவு |
|---|---|---|
| 01 | 9000 BTU | 01 |
| 02 | 12000 BTU | 04 |
| 03 | 18000 BTU | 03 |
| 04 | 24000 BTU | 07 |
| 05 | 36000 BTU | 04 |

மேற்படி வேலைகள் பற்றிய சகல விபரங்களுக்கு கேள்வி ஆவணங்களுடன் பெற்றுக்கொள்ளலாம். மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணம் ரூ. 2500.00 ஆகும்.

2024.02.26 முதல் 2024.03.11 வரை அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) களுத்துறை தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவனத்திலிருந்து கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 2024.03.12 மு.ப. 10.30 இற்கு கேள்விகள் திறக்கப்படும்.

**தொ. பே. இல : 034-2222264 / 034-2222001**

**நிர்வாகப் பிரிவின் நீடிப்பு : 237 / 333**

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு, தேசிய சுகாதார விஞ்ஞானக் கல்வி நிறுவகம், களுத்துறை**

---

# பெறுகை அறிவித்தல்

## மாவட்ட செயலகம், மாகம் ருஹுனுபுர நிர்வாகக் கட்டிடத்தொகுதி, ஹம்பாந்தோட்டை

ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரால் 2024.02.26 முதல் 2024.03.18 வரையான கால எல்லை சார்பாக மாகம் ருஹுனுபுர நிர்வாகக் கட்டிடத்தொகுதியின் சுத்திகரிப்புச் சேவை மற்றும் உணவக சேவையை மேற்கொள்வதற்காக கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

அடிப்படைத் தகைமைகள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமாக மேலதிக தகவல்களை ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலக உத்தியோகபூர்வ இணையதளமான www.hambantota.dist.gov.lk இல் தரப்பட்டுள்ளது, கேள்வி விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கு எதிர்ப் பார்க்கின்ற தகைமையுடனான வழங்குநர்களுக்கு இதற்காக சமுகமளிக்குமாறு திறந்த அழைப்பு விடுக்கப்படுகிறது.

**எச். பீ. சுமனசேக்கர,**
**தலைவர் - பெறுகைக் குழு,**
**மாவட்ட செயலகம் - ஹம்பாந்தோட்டை.**

---

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## நீர்ப்பாசன அமைச்சு

## நீர்ப்பாசன திணைக்களம்

## Procurement of supplying Sand, Metal and Rubbles for providing loading Berm from stn.8+550 to stn.8+700 in D/S of Parakrama Samudraya bund

## பொலன்னறுவ நீர்ப்பாசன அபிவிருத்தி செயற்றிட்டம்

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

**IFB No.: IFB/DI/PLN/PIDP/NCB/2024/001**

1. பின்வரும் வழங்கலுக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து நீர்ப்பாசன திணைக்களத்தின் சார்பாக பிராந்திய பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| விலைமனு இல. | பெறுகையின் விளக்கம் | பொருள் | அளவு (கன அடி) | விலைமனுப் பிணை | | | விலைமனு செல்லுபடியாகும் காலப்பகுதி (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை (இ.ரூபாவில்) (வங்கி உத்தரவாதம்) | தொகை (இ.ரூபாவில்) (ரொக்கப் பணத்தில்) | காலப்பகுதி (நாட்கள்) | |
| DI/PLN/PIDP/NCB/2024/001 | Supplying Sand, Metal and Rubbles for providing loading berm from stn.8+550 to stn.8+770 in D/S of Parakrama Samudraya bund | ஆற்று மணல் | 171.0 | 135,000.00 | 72,000.00 | 105 (2024.07.01 ஆம் திகதியன்று வரையும்) | 77 |
| | | சிறுகற்கள் (20-37.5 மி.மீ.) | 161.0 | | | | |
| | | சரளைக் கற்கள் (300-450 மி.மீ.) | 1,740.0 | | | | |
| | | சரளைக் கற்கள் (150-225 மி.மீ.) | 20.0 | | | | |

2. 2024.02.27 ஆம் திகதியிலிருந்து 2024.03.18 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் ஒவ்வொரு தொகுதிக்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக 5,000 இலங்கை ரூபாவை செலுத்திய பின்னர், பொலன்னறுவ அலுவலகம், புதிய நகரம், நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகம், நீர்ப்பாசன பணிப்பாளர் என முகவரியிடப்பட்டு கம்பனி தலைப்புக் கடிதத்தில் (மூலப்பிரதி) எழுத்துமூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், பொலன்னறுவ, நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்திலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறையானது ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள விலைமனுதாரர் பொலன்னறுவ நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்தில் கையேற்பதற்கு முன்னராக விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம். (தொலைபேசி: 027-2222215. தொலைநகல்: 027-2222361)

4. விலைமனு முன்னோடிக் கூட்டமானது பொலன்னறுவ நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்தில் நடைபெறும் (திகதி மற்றும் நேரம் ஆகியன கீழேயுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன). எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நீர்ப்பாசன பிரதேச பொறியியலாளரின் உதவியுடன் வேலைத்தளங்களை பார்வையிட்ட பின்னர் (கீழேயுள்ள அட்டவணையில் திகதி மற்றும் நேரம் ஆகியன காட்டப்பட்டுள்ளன) விலைமனு முன்னோடிக் கூட்டத்தில் பங்குபற்றலாம்.

| தள விஜயம் | விலைமனு முன்னோடிக்கூட்டம் |
|---|---|
| திகதி: 2024 மார்ச் 5 | திகதி: 2024 மார்ச் 05 |
| நேரம்: மு.ப. 10 மணிக்கு | நேரம்: பி.ப. 2 மணிக்கு |
| ஆரம்பமாகும் இடம்: பொலன்னறுவ பிரதேச பொறியியலாளரின் அலுவலகம். தொலைபேசி: 027 - 2222330 | இடம்: பொலன்னறுவ புதிய நகரம், நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகம் தொலைபேசி: 027 - 2222215 |

5. வழங்குநரானவர் அனைத்து சட்டப்படியான அங்கீகாரங்களையும் பொருத்தமான அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெற்றிருப்பதுடன் சட்டத்தடை நீக்குவதற்கான வரிகள், கட்டணங்கள், அறவீடுகள் இன்னும் பலவற்றையும் செலுத்துதல் வேண்டும்.

6. விலைமனுக்கள் 2024 ஜுன் 3 ஆம் திகதி வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 77 நாட்கள்) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். விலைமனுவானது 2024 ஜுலை 1 ஆம் திகதியன்று வரையும் (விலைமனுக்களை மூடும் திகதியிலிருந்து 105 நாட்கள்) மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தொகைக்காக பொலன்னறுவ நீர்ப்பாசன பணிப்பாளரின் பெயரில் வழங்கப்பட்டதாகவுமுள்ள விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணைகளில்லாத மற்றும் நிருணயிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாகவில்லாத விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

7. விலைமனுக்கோரல் ஆவணங்களின் அனைத்து பக்கங்களும் விலைமனுதாரரினால் கையொப்பமிடப்பட்டு அவரது இலட்சினை பதிக்கப்படல் வேண்டும்.

8. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட தபாலுறையானது இரு பிரதிகளில் 2024.03.19 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் பதிவுத் தபாலில் 'நீர்ப்பாசன பணிப்பாளர், நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகம், புதிய நகரம், பொலன்னறுவ' (விலைமனுவை சமர்ப்பித்தல் நோக்கத்திற்காக மாத்திரம்) என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பொலன்னறுவ நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர், பொலன்னறுவ நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்தில் உடனடியாகவே திறக்கப்படும்.

9. தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் வழங்கலின் விளக்கம் மற்றும் ஒப்பந்த இலக்கம் ஆகியனவற்றை தயவு செய்து குறிப்பிடவும்.

10. விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் சட்டபூர்வமான அதிகாரம் பெற்ற பிரதிநிதியானவர் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகம்,**
**புதிய நகரம்,**
**பொலன்னறுவ.**

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## போதனா வைத்தியசாலை - கராப்பிட்டிய

கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான இயக்கம் மற்றும் பராமரிப்பு வேலைக்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார். விலைமனுவானது இரு பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| கேள்வி இல. | வேலை அம்சம் | விலைமனு தாரருக்காக தேவைப்படும் தகைமை | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | விலைமனுப் பிணையின் பெறுமதி | மதிப்பீடு செய்யப் பட்டுள்ள அடிப்படை ஆகுசெலவு (மில்லியனில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 2024/2025 ஆம் ஆண்டுகளுக்காக வடிகாலமைப்பு சுத்திகரிப்பு பொறித்தொகுதியின் இயக்கம் மற்றும் பராமரிப்பு | ஈஎம்-05 | 3,500.00 | 46,000.00 | 4.6 |

1. கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் அலுவலகத்தினால் வழங்கப்படும் படிவங்களில் மாத்திரமே விலைமனுவானது சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. விலைமனுக்கோரல் ஆவணங்கள் 2024.03.17 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தைச் செலுத்திய பின்னர், வைத்தியசாலை அலுவலகத்திலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.

3. 2024.03.18 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் தலைவர், போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் திறத்தலில் பங்குபற்றலாம்.

4. விலைமனுவை அடக்கியுள்ள தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விலைமனுவின் பெயர் மற்றும் கேள்வி இலக்கம் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.

5. எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்களையும், கேள்வியை வழங்குதலையும் நிராகரிப்பதற்குமான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.

தொடர்பிலக்கங்கள்: 091-2232250, 091-2232176.

**தலைவர்,**
**போதனா வைத்தியசாலை, கராப்பிட்டிய,**
**காலி.**
26.02.2024.

---

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## கல்வி அமைச்சு

## இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (NERDC)

## அல்பிட்டிய பெருந்தோட்ட PLC க்கு பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் இரட்டை வீட்டை நிர்மாணிப்பதற்காக விலைக்கோரல்

**விலைக்கோரல் இல.: NERDC/DPC Minor(com)/01/24**

1. பின்வருமாறு விபரிக்கப்பட்டதும் 6.23 மில்லியன் ரூபா (தற்செயலான செலவுகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நீங்கலாக) கிரயச் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான அல்பிட்டிய பெருந்தோட்ட PLC க்கு பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் இரட்டை வீட்டை நிர்மாணிப்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தின் (NERDC) சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

   வேலைகளின் சுருக்கமான விளக்கம் : அல்பிட்டிய பெருந்தோட்ட PLC க்கு பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் இரட்டை வீட்டை நிர்மாணித்தல்

   செயற்றிட்ட அமைவிடம் : பூண்டுலோயா

   ஒப்பந்தக் காலப்பகுதி : 90 நாட்கள்

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

3. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் உள்ளடங்காதவராகவும் கட்டிட நிர்மாணத்தில் பின்வரும் **CIDA [ICTAD]** C7 அல்லது மேற்பட்ட தர தேவைப்பாடுகளை கொண்டிருத்தலும் வேண்டும்.

4. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள் பின்வருமாறு: கட்டிட நிர்மாணத்தில் **CIDA[ICTAD]** C7 அல்லது மேல்.

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல் அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் பின்வரும் முகவரியில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

   தொலைபேசி: 011-3500017. தொலைநகல்: 011-2233153. மின்னஞ்சல்: supplies@nerdc.lk

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் **2024.02.26**ஆம் திகதி முதல் 2024.03.13ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000.00 ரூபாவை செலுத்திய பின்னர், பின்வரும் முகவரிக்கு எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றை கொள்வனவு செய்யலாம்.

7. விலைமனுக்களை **2024.03.14**ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் முத்திரையிடப்பட்டு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது நிதிப் பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுவை தாங்கி வரும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் **"விலைக்கோரல் இல.: NERDC/DPC Minor(com)/01/24 - அல்பிட்டிய பெருந்தோட்ட PLC க்கு பூண்டுலோயா டன்சினன் தோட்டத்தில் இரட்டை வீட்டை நிர்மாணிப்பதற்காக விலைமனு கோரல் - 2024-03-14ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் திறக்க வேண்டாம்"** என்ற சொற்கள் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும்.

8. விலைமனுக்கள் முடிவுறுத்தல் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. அனைத்து விலைமனுக்களுடனும் 60,000.00 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறியானது விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:**

**வழங்கல் அதிகாரி,**
**பெறுகைப் பிரிவு,**
**இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம்,**
**2P/17B, கைத்தொழில் பேட்டை,**
**ஏக்கல, ஜா-எல.**

**பணிப்பாளர் நாயகம்,**
**NERDC, 2P/17B, கைத்தொழில் பேட்டை**
**ஏக்கல, ஜா-எல**
**தொலைபேசி : 011-2236284/2236307**
**தொலைநகல் : 011-2233153**

---

SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Best way to fulfil your Future Dreams
Affordable & Attractive Packages for YOU.
077 7 278 948 / 011 2 429 343/ 342 / 011 2 429 383
E-mail - classified@lakehouse.lk

# மக்கள் வங்கி

## மொனராகல பிராந்தியம்
## மீட்கப்படாத அடகு பொருட்களை ஏலத்தில் விற்றல்.

மக்கள் வங்கியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றும் சேவை நிலையங்கள், என்பவற்றில் 2022.11.30ஆம் திகதி வரை (ஒரு வருடத்திற்கு அடகு வைக்கப்பட்ட) அடகு வைக்கப்பட்டு 2024.03.11ஆம் திகதி கொடுக்கல் வாங்கல் முடிவடையும் வரை மீட்கப்படாத. தங்க பொருட்கள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் மற்றும் இடங்களில் மு.ப. 9.00 மணிக்கு ஆரம்பித்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

**ஏலவிற்பனை நடத்தப்படும் திகதி 2024.03.12 மற்றும் 2024.03.13**

| | |
|---|---|
| **ஏலவிற்பனை நடைபெறும் இடம்** | மொனராகல - 068 |
| **கிளை** | பிபில வெல்லவாய. மொனராகல. புத்தல, கதிர்காமம், தலமல்வில். மெதகம, படல்கும்புர, சியம்பலாண்டுவ |
| **சேவை நிலையம்** | மொனராகல, தம்பகல்ல, எதிலிவெவ, ஹம்பேகமுவ, ஒக்கம்பிட்டிய |

மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி நடத்தப்படவிருக்கும் இந்த ஏலவிற்பனையை மீண்டும் அறிவித்தல் வழங்காமல் வங்கியின் தற்றுணிபின் படி இரத்துச் செய்வதற்கு, ஒத்திவைப்பதற்கு அல்லது ஒருங்கிணைத்து நடத்துவதற்கு வங்கிக்கு உரிமை உண்டு.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், வெல்லவாய வீதி, மொனராகல.

**தொலைபேசி இலக்கம் : 055-2276350 , 055-2276347**

PEOPLE'S BANK
Pride of the Nation

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## அரச அச்சக கூட்டுத்தாபனம் (SPC)
## கணக்கிடல் மென்பொருளின் பெறுகை

கணக்கிடல் மென்பொருளின் பெறுகைக்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய சந்தைவிலை ஒப்பீட்டு நடைமுறையின் கீழ் அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

| அம்சு இல. | அம்சம் | கேள்வி தொடர்பிலக்கம் | விலைமனு உத்தரவாதம் (ரூபாவில்) | செயற்பாட்டு உத்தரவாதம் |
|---|---|---|---|---|
| 01 | கணக்கிடல் மென்பொருளின் பெறுகை | SPC/SUP/F1/003/2023/509 | 30,000.00 | 300,000 |

2024 பெபரவரி 26 ஆம் திகதியன்று ஆரம்பமாகி 2024 மார்ச் 18 ஆம் திகதியன்று வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் பாதுக்க, பணாலுவ, அரச அச்சக கூட்டுத்தாபன வழங்கல் பிரிவிற்கு எழுத்துமூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை பரீட்சித்து பெற்றுக் கொள்ளலாம்.

2024 மார்ச் 7 ஆம் திகதியன்று விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும்.

உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வி தொடர்பிலக்கத்தை குறிப்பிட்டு 2024 மார்ச் 19 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக வழங்கல் முகாமையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

2024 மார்ச் 19 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு விலைமனுக்களை மூடிய பின்னர், நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அரச அச்சக கூட்டுத்தாபனம்,**
**பணாலுவ, பாதுக்க.**
**தொலைபேசி: 0112 75 75 01**

SPC

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

**106**
**கார்கள்**
**விற்பனைக்கு**

327527 ISUZU, 1989, CAR அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 012874

**107**
**டொயோட்டா கார்கள்**
**விற்பனைக்கு**

KD-1515 TOYOTA ALLION , 2002, CAR அதியுயர் விலை க்கு. வெலிப ல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071454295 8 . 012867

**118**
**ஜீப்புகள்,பிக்கப்புகள்**
**விற்பனைக்கு**

653084 NISSAN, 1998, JEEP அதியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 012879

**119**
**பஸ்கள், லொறிகள்**
**விற்பனைக்கு**

DAD-1704 DFSK, 2016, LORRY அ தியுயர் விலைக்கு. வெலி பல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, கா லி வீதி, கொழும்பு 03 . தொலைபேசி. 07 1454295 8 . 012882

LP -0335 JAC, 2019, LO RRY அதியுய ர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இ ல . 310, காலி வீதி, கொழும்பு 0 3. தொலைபேசி. 0 714 5 4 295 8 . 012885

**122**
**மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்**
**விற்பனைக்கு**

AAZ-0345 BAJAJ, 2015, T HREEWHEEL அதியுயர் விலைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி. 071121081 0 . 012871

**Repeat Your Ad For Better Offers**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# முதலீட்டிற்கான சந்தர்ப்பங்கள்

## துறைமுகம் மற்றும் கடல்சார் இணைந்த வர்த்தக / சேவைகளை நடத்தும் நோக்கத்திற்காக இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு உரிமையுள்ள கொழும்பு துறைமுகத்திலுள்ள பெறுமதியான காணி / கட்டிடம் மற்றும் கடலுக்கு முகப்பாகவுள்ள பிரதேசத்தை குத்தகைக்கு வழங்கல்

- ❖ கொழும்பு துறைமுகத்தில் பயணிகள் முனையத்திற்கு மிகஅருகில் அமைந்துள்ள அண்ணளவான 20 பேர்ச் விஸ்தீரணமுள்ள அமைவிடமொன்றில் துறைமுகம் தொடர்பான வர்த்தக மற்றும் கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு/செயற்படுத்துவதற்கு விரும்புபவர்களிடமிருந்து சாத்தியமான முன்மொழிவுகளை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையானது அழைக்கின்றது.

**நிபந்தனைகள் பின்வருமாறு:**

- ❖ ஆர்வமுள்ள சாரார் கீழே குறிப்பிட்டுள்ளவாறு இதுஅச இடமிருந்து கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக் கொண்ட பின்னர் செயற்றிட்ட முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
- ❖ உரித்தான விலைமனுக்கள்/ முன்மொழிவுகள் இதுஅச இனால் நியமிக்கப்பட்ட விலைமனு மதிப்பீட்டு குழுவொன்றினால் மதிப்பீடு செய்யப்பட்டு அனுபவம், விலைமனுக்கோரல், முன்மொழிவின் சாத்தியம், விலைமனுக்களை சமர்ப்பிக்கும் வேளையில் உரித்தான 'வர்த்தக/ சேவையை' முன்னெடுத்துச் செல்வதற்காக தேவைப்படும் அனுமதி ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்களை தெரிவு செய்யும்.
- ❖ எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையுடன் குத்தகை ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்.
- ❖ உரித்தான குத்தகை ஒப்பந்தமானது உரித்தான சாராரின் செயற்பாட்டு அடிப்படையில் நீடிப்புக்களுக்கு உட்பட்டதாகவிருக்கும்.
- ❖ துறைமுக உள்ளக இடப்பரப்புகளுக்காக விலைமனுக்களை சமர்ப்பிக்கும் எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்கள் துறைமுகத்திற்கான சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு அமைந்தொழுகல் வேண்டும்.
- ❖ எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர் நிகரான வர்த்தக/சேவைகளில் ஆகக் குறைந்தது ஐந்து (5) வருட கடந்த கால அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- ❖ எதிர்பார்க்கப்படும் விலைமனுதாரர்களுக்காக தள விஜயமொன்று ஒழுங்கு செய்யப்படும்.
- ❖ கேள்வி செயற்பாட்டிற்கான அழைத்தலானது பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளது.

  அ. 2024.02.28 ஆம் திகதியன்று மு.ப. 8.30 மணியிலிருந்து விண்ணப்பங்கள் வழங்கப்படும்.
  ஆ. 2024.03.20 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு விண்ணப்பங்கள் மூடப்படும்.
  இ. 2024.03.20 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.
- ❖ 2024.02.28 ஆம் திகதியன்றிலிருந்து வார நாட்களில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 2024.03.20 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணி வரையும் மீளளிக்கப்படாத தொகையாகிய 10,000 ரூபா மற்றும் நிருவாக கட்டணங்களின் ஆகுசெலவாக பிரயோகப்படுத்தக்கூடிய வரிகளையும் செலுத்திய பின்னர், கொழும்பு-10, T.B. ஜாயா மாவத்தை, 464ஏ இலக்கத்திலுள்ள கொழும்பு தலைமையக கட்டிடத்தின் 5 ஆம் மாடியிலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து உரித்தான விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளலாம்.
- ❖ ஆர்வமுள்ள சாரார் 2024.03.20 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு கூறப்பட்டுள்ள முகவரியிலுள்ள இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவ பிரிவின் பிரதான முகாமையாளரின் அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியில் ஆகு செலவு மதிப்பீட்டுக்களுடனான உரித்தான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கோரல்கள்/ விலைமனு முன்மொழிவுகள் ஆகியன சேர்க்கப்படலாம்.

விலைமனுக்களை சமர்ப்பிக்க வேண்டிய முகவரி:

**பிரதான முகாமையாளர்,**
**இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவம்,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**8 ஆம் மாடி, கொழும்பு தலைமையக கட்டிடம்,**
**இல.: 464ஏ, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10.**

- ❖ இது தொடர்பான மேலதிக விபரங்கள் 0711732275 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக இடப்பரப்புக்கள் மற்றும் காணி முகாமைத்துவத்திற்கான பதில் கடமையாற்றும் பிரதி பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

# இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப் பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6551(MP) | Spares for Multifunction System of ZPMC STS at ECT | 20,000.00 | 1,000.00 | 2024.04.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CES/FP/04/ PT/6536 (MP) | Spares for Pintsch Bubenzer BSZ 400/II-JIS CR73 Rail Clamp Systems | 20,000.00 | 1,000.00 | 2024.04.04 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/067 | Spares parts for Dutch Lanka Trailers | 19,500.00 | 1,000.00 | 2024.03.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/10/067 | Spares for Cummins NTA 855 Engines of RTG Cranes | 60,000.00 | 1,000.00 | 2024.03.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/069 | Spares for UD Nissan Prime Movers | 26,000.00 | 3,500.00 | 2024.03.14 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/ PT/07/063 | Spare parts for Terberg Terminal Tractors | 18,000.00 | 1,000.00 | 2024.03.15 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும்,எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்ட நபரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்திசெய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவத்தையும்) சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவத்திற்கான பிரதான முகாமையாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2024 பெப்ரவரி 26 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக் கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப் பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான முகாமையாளர் (வழங்கல்கள் மற்றும் பொருட்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள் : 2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள் : 2381652, 2470443**

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## மாகாண கல்வித் திணைக்களம், கிழக்கு மாகாணம்

1. தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலமாக பின்வரும் வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகைமையுள்ள நிர்மாண ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கிழக்கு மாகாண, மாகாண கல்வித் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| இல. | அடையாள இல. | விளக்கம் | கட்டிட வகுதியில் விலை மனுதாரரின் தேவைப்படும் CIDA தரம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) | பொறியியல ாளரின் மதிப்பீடு (மில்லியன் ரூபாவில்) | பூர்த்தி செய்யப்பட வேண்டிய காலம். (நாட்காட்டி நாட்களில்) | விலைமனுக் கோரல் ஆவணத்தை வழங்குமிடம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | GEMP/ EP/W/ NCOE/2023 /08-01 | மட்டக்களப்பு தேசிய கல்வி கல்லூரியில் கட்டிடங்களின் பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்தல் | சி-6 மற்றும் சி-5 | 170,000 | 16.95 | 75 நாட்கள் | மாகாண கல்விப் பணிப்பாளரின் அலுவலகம் |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். இந்த பெறுகையின் கீழ் (பெசேவ மற்றும் ஏனைய வரிகள் நீங்கலாக) நிறைவேற்றப்படவுள்ள வேலையின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாகவிருப்பதனால்,பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தரமுன்னுரிமை ஆகியன 04/2016 (iii) என்ற இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையில் நிர்ணயிக்கப்பட்டவாறு பிரயோகப்படுத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் ஒப்பந்தக்காரர்கள் விஷேடத்துவ துறையில் கட்டிடத்திற்காக அட்டவணையில் விதித்துரைக்கப்பட்டவாறான தரத்தின் கீழ் ICTAD/CIDA உடன் பதிவு செய்திருத்தல் வேண்டும்.
4. ஒப்பந்தத்தை வழங்குவதற்கான தகைமைக்கான தகைமைத் தேவைப்பாடுகள்.

| தொழில்நுட்ப தேவைப்படுத்தல்கள் | நிதியிடல் தேவைப்படுத்தல்கள் | சட்டரீதியிலான தேவைப்படுத்தல்கள் |
|---|---|---|
| தகைமை மற்றும் அனுபவத்துடனான ஆகக்குறைந்த நபர்கள்<br>01. தொழில்நுட்ப அலுவலர்-01<br>தகைமை: NDT (சிவில்) அல்லது நிகரான அனுபவம்: 3 வருடங்கள் அல்லது<br>தகைமை: NCT அல்லது நிகரான அனுபவம்: 5 வருடங்கள்<br>02. வேலை மேற்பார்வையாளர்-01<br>தகைமை: NCT அல்லது நிகரான அனுபவம்: 3 வருடங்கள் | * மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து விலைமனு தொகையின் 20% இற்கான கடன் வசதியை விலைமனுதாரர் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>* கடந்த 3 வருடங்களில் நிறைவேற்றப்பட்ட நிர்மாண வேலையின் வருடாந்த சராசரி பெறுமதியானது விலைமனுத் தொகையின் ஆகக்குறைந்தது 60% இற்கு சமமாகவிருத்தல் வேண்டும்.<br>* கடந்த 3 வருடங்களில் நிகரான தன்மையில் ஆகக்குறைந்தது விலைமனுத் தொகையின் 30% இற்கு குறையாத ஒரு ஒப்பந்தத்தையாவது விலைமனுதாரர் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும். | * விலைமனுதாரர் பதிவு செய்யப்பட்ட சட்டநிலபரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் (ஏக உரிமையாளர், பங்குடைமை, கம்பனிபோன்றவை)<br><br>* அரச நிதித் திணைக்களம் அல்லது வேறேதாவது முகவராண்மையினால் அபகீர்த்தியானோர் பட்டியலிலிடப்பட்ட / தவறிழைத்த ஒப்பந்தக்காரரென விலைமனுதாரர்கள் பிரகடணப்படுத்தியிருத்தல் ஆகாது |

5. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கிழக்கு மாகாண,மாகாண கல்வித் திணைக்கள மாகாண பொறியியலாளரிடமிருந்து பெற்று மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
6. 2024.02.26 ஆம் திகதியிலிருந்து 2024.03.18 ஆம் திகதிவரையும் மு.ப.9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 7,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், திருகோணமலை, மாகாண கல்வித் திணைக்கள, மாகாண பணிப்பாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்று இரு பிரதிகளில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் கிழக்கு மாகாண, மாகாண கல்வித் திணைக்கள கணக்கிடல் கிளையில் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
7. விலைமனுக்கள் தனித்தனியான உறைகளில் இரு பிரதிகளில் 2024.03.19 ஆம் திகதியன்று பி.ப. 3 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியான மாகாண கல்வித் திணைக்களம், கிழக்குமாகாணம், உட்துறைமுகவீதி, திருகோணமலை என்பதில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அவைகளை மூடிய பின்னர் விரைவாகவே திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் அவைகளின் சமர்ப்பித்தலுக்கான இறுதித் திகதியிலிருந்து 77 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் ஒன்றில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட புகழ்வாய்ந்த வங்கியொன்றிலிருந்து அல்லது நிர்மாண உத்தரவாத நிதியத்திலிருந்து பெறப்பட்ட விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணையானது 2024.03.19 ஆம் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
10. திருகோணமலை, கிழக்கு மாகாணம், மாகாண கல்வித் திணைக்களத்தில் 2024.03.06 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடாத்தப்படும்.
11. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியானதும் முடிவானதுமாகும். திணைக்கள பெறுகைக் குழுவானது எந்தவொரு தனியான அல்லது அனைத்து விலைமனுக்களையும் அதனது சுயதீர்மானத்தில் நிராகரிப்பதற்கான உரிமையைக் கொண்டுள்ளது

**எஸ். குலேந்திரகுமார்,**
**தலைவர்/மாகாணப் பணிப்பாளர்,**
**திணைக்களபெறுகைக் குழு,**
**மாகாணகல்வித் திணைக்களம், கிழக்குமாகாணம்.**
**திகதி: 21.02.2024**

# பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தில் சமீர இல்லை, நிசங்கவும் சந்தேகம்

பங்களாதேஷுக்கு எதிராக அடுத்த மாத ஆரம்பத்தில் நடைபெறவுள்ள மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளுக்கான இலங்கை குழாத்தில் இருந்து உபாதைக்கு உள்ளாகி இருக்கும் வேகப்பந்து வீச்சாளர் துஷ்மந்த சமீர நீக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருக்கும் இலங்கையின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டிகளுக்கு ஆப்கானுடனான தொடரில் ஆடிய அதே மாற்றமில்லாத குழாத்தை அறிவிக்க தேர்வுக் குழுவினர் தீர்மானித்திருப்பதாக இலங்கை கிரிக்கெட் தலைமை நிர்வாக அதிகாரி ஆஷ்லி டி சில்வா தெரிவித்துள்ளார். எனினும் சமீரவுக்கு குறைந்தது நான்கு வாரங்களுக்கு ஓய்வு அளிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



இந்த வார கடைசியில் பங்களாதேஷ் செல்லும் இலங்கை அணி அங்கு மூன்று டி20, மூன்று ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடவுள்ளது. டி20 போட்டிகளுடன் ஆரம்பமாகும் இந்தத் தொடரில் தொடர்ந்து ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகள் நடைபெறவுள்ளன.

எவ்வாறாயிலும் ஆப்கானுடனான ஒருநாள் தொடரின்போது உபாதைக்கு உள்ளான சமீர, பங்களாதேஷ் சுற்றுப்பயணத்தை இழந்துள்ளார். சமீரவுக்கு பதில் அசித்த பெர்னாண்டோவை அழைக்க தேர்வுக் குழுவினர் தீர்மானித்துள்ளனர். ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் அவர் சமீரவுக்கு மாற்று வீரராக அழைக்கப்பட்டிருந்தார். இதேநேரம் ஆப்கானுக்கு எதிரான கடைசி டி20 போட்டியின்போது அதிரடி அரைச்சதம் பெற்ற பின் காயத்திற்கு உள்ளான ஆரம்ப துடுப்பாட்ட வீரர் பத்தும் நிசங்க பங்களாதேஷ் சுற்றுப்பயணத்திற்கு தயாராவார் என்று தேர்வாளர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

பத்தும் தொடை எலும்புக் காயத்திற்கு உள்ளான நிலையில் நாளை (27) மற்றும் நாளை மறுதினம் (28) இலங்கை இரு பயிற்சி முகாம்களை நடத்தவிருப்பதோடு அதன்போது பத்துமின் உடல் தகுதி குறித்து மதிப்பீடு செய்யப்படவுள்ளது.

இதேவேளை ஆப்கானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியில் நடுவருடன் முரண்பட்டு நடத்தை விதியை மீறியதால் போட்டித் தடைக்கு உள்ளான இலங்கை டி20 அணித் தலைவர் வனிந்து ஹசரங்கவுக்கு பங்களாதேஷுக்கு எதிரான முதல் இரு டி20 போட்டிகளிலும் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

# மகளிர் கால்பந்து: மகாஜனா இறுதிப் போட்டிக்குத் தகுதி

மாளிகைக்காடு குறூப் நிருபர்



இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் அகில இலங்கை ரீதியில் நடைபெற்று வரும் 18 வயதுக்குட்பட்ட பெண்கள் அணிகளுக்கிடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டிக்கு யாழ்ப்பாணம், தெல்லிப்பளை மகாஜனா கல்லூரி தகுதிபெற்றுள்ளது.

அனுராதபுரத்தில் அண்மையில் (22) நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் குருணாகல் கவுசிகமுவ மகா வித்தியாலயத்தை எதிர்கொண்ட தெல்லிப்பளை மகாஜனா 7–0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றிபெற்றது. இதன்படி அந்த அணி இறுதிப்போட்டியில் களுத்துறை சென். ஜோன் கல்லூரி அணியை மார்ச் மாதம் 9 ஆம் திகதி கொழும்பில் எதிர்கொள்ளவுள்ளது.

# திலகரத்ன டில்ஷானுக்கு அவுஸ்திரேலிய குடியுரிமை



இலங்கை முன்னாள் கிரிக்கெட் வீரர் திலகரத்ன டில்ஷான் அவுஸ்திரேலிய குடியுமையை பெற்றுள்ளார். டில்ஷான் குடியுரிமையை பெற்றதை அடுத்து அது தொடர்பில் அவுஸ்திரேலிய எம்.பி. ஜேசன் வுட் சமூக ஊடகத்தில் பதிவொன்றையும் வெளியிட்டுள்ளார்.

“இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும் இலங்கை தேசிய அணியின் முன்னாள் தலைவருமான திலகரத்ன டில்ஷானின் பங்கேற்புடன் இன்று குடியுமை வழங்கும் நிகழ்வு அதிக சிறப்பாக இருந்தது” என்று அந்தப் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

“ஒரு புதிய அவுஸ்திரேலியர் மற்றும் உள்ளூர் குடியிருப்பாளராக அவர் உள்ளூர் அணி ஒன்றில் இணைந்து சமூகத்துடன் தமது திறமையை தொடர்ந்து பகிர்ந்து கொள்வார் என்று எதிர்பார்க்கிறேன்” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அவரது மகள் ரெசான்தியும் தனது தந்தையின் அடிச்சுவட்டை பின்பற்றுவது சிறந்ததாக உள்ளது என்றும் அவர் கூறினார். அவுஸ்திரேலிய குடியுரிமைக்காக விண்ணப்பிக்கும் 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் குடியுரிமை சோதனை ஒன்றில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அதேபோன்று விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அவுஸ்திரேலியாவில் நிரந்தரமான வசிப்பவராக இருக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஹூத்தி இலக்குகளின் மீது அமெரிக்கா புதிய தாக்குதல்



யெமனில் 18 ஹூத்தி தளங்கள் மீது அமெரிக்கா மற்றும் பிரிட்டன் போர் விமானங்கள் தாக்குதல்களை நடத்தியதாக அமெரிக்க பாதுகாப்பு தலைமையகமான பெண்டகன் குறிப்பிட்டுள்ளது. இந்தக் கூட்டணி நடத்தும் நான்காவது தாக்குதலாக இது உள்ளது.

இந்தக் கிளர்ச்சியாளர்களின் களஞ்சிய வசதிகள், ஆளில்லா விமானங்கள், வான் பாதுகாப்பு அமைப்புகள், ராடார்கள் மற்றும் ஹெலி ஒன்றை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தியதாக அமெரிக்கா கூறியது. ஹூத்தி திறனை மேலும் பலவீனப்படுத்தும் செயற்பாட்டை முன்னெடுத்ததாக பிரிட்டன் கூறியது.

முக்கிய கடல் வர்த்தகப் பாதையான செங்கடலில் செல்லும் கப்பல்களை இலக்கு வைத்து பலஸ்தீனத்திற்கு ஆதரவாக ஹூத்திக்கள் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இதனால் சர்வதேச விநியோக சங்கிலியில் பெரும் இடையூறு ஏற்பட்டிருப்பதோடு பல முக்கிய கப்பல் நிறுவனங்கள் பாதையை மாற்றிக் கொண்டதால் செலவு அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் யெமன் மீதான தாக்குதலுக்கு ஈரான் கண்டனத்தை வெளியிட்டுள்ளது. அரபு நாடுகளின் இறைமை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை மீறும் செயல் என்று அது குறிப்பிட்டுள்ளது.

தலைநகர் சனா உட்பட யெமனின் பெரும்பகுதி ஈரான் ஆதரவு ஷியா கிளர்ச்சிக் குழுவான ஹூத்திக்கள் கட்டுப்பாட்டிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச செய்திகள்

# அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் தேர்தல்: டிரம்ப் தொடர்ந்து வெற்றி



அமெரிக்காவின் சௌத் கரோலினா மாநிலத்தில் நடைபெற்ற குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளருக்கான முன்னோடி வாக்கெடுப்பில் டொனால்ட் டிரம்ப் அபார வெற்றி பெற்றுள்ளார்.

அவருக்கு எதிராகப் போட்டியிட்ட நிக்கி ஹேலி தொடர்ந்து முயற்சி செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

டிரம்புக்கு 58 வாக்குகளும் ஹேலிக்கு 41 வீத வாக்குகளும் கிடைத்தன. ஹேலி சௌத் கரோலினா மாநிலத்தின் முன்னாள் ஆளுநராவார்.

அடுத்த மாதம் 5ஆம் திகதி 15 மாநிலங்களில் மில்லியன் கணக்கானோர் வாக்களிக்கவுள்ளனர்.

டிரம்ப் இதுவரை நடைபெற்ற எல்லா முன்னோடி வாக்கெடுப்பிலும் வெற்றி பெற்று குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தகுதி பெறுவதை நெருங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் நவம்பர் 5ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# நிலவைத் தொட்டதும் கவிழ்ந்த ஆய்வுக்கலம்



அமெரிக்காவின் ஒடிசியஸ் என்றழைக்கப்படும் ஆளில்லா ஆய்வுக்கலம் நிலவைத் தொட்டதும் கவிழ்ந்ததாகத் தெரியவந்துள்ளது. ஆய்வுக்கலத்தை உருவாக்கிய தனியார் நிறுவனமான இன்டியுடிவ் மஷீன்ஸ் அவ்வாறு கூறியது.

கடந்த வியாழக்கிழமை (22) ஒடிசியஸ் ஆய்வுக்கலம் நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கியது. முதலில் கலம் நேராய் இருப்பதாக இன்டியுடிவ் மஷீன்ஸ் கூறியது. பின்னர் கலம் ஒரு பக்கம் சாய்ந்துவிட்டதாக நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஸ்டீவ் அல்டிமஸ் குறிப்பிட்டார். அதனால் தகவல்களைப் பதிவிறக்கம் செய்வதில் தடங்கல் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் விளக்கினார்.

எனினும் ஒடிசியஸ்ஆய்வுக்கலம் நிலவில் தரையிறங்கியது வெற்றியாகவே கருதப்படுகிறது.

2030ஆம் ஆண்டுக்குள் மனிதனை மீண்டும் நிலவுக்கு அனுப்ப நாசா திட்டமிட்டுள்ளது.



# காசாவில் நிலைமை மேலும் மோசமடையும் சூழலில் பேச்சைத் தொடர்வது குறித்து இஸ்ரேல் ஆலோசனை

## வடக்கு காசாவில் பசியால் இரண்டு மாத குழந்தை மரணம்



இஸ்ரேலின் கடுமையான தாக்குதல்களுக்கு மத்தியில் காசாவில் மனிதாபிமான நெருக்கடி தீவிரம் அடைந்திருக்கும் சூழலில் கைதிகள் பரிமாற்றம் மற்றும் போர் நிறுத்தம் ஒன்றுக்கான பேச்சுவார்த்தைக்கான அடுத்த கட்டம் குறித்து இஸ்ரேலிய போர் அமைச்சரவை ஆலோசனை நடத்தியுள்ளது.

பாரிஸ் சென்று பணயக்கைதிகள் உடன்படிக்கை ஒன்று தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்திய இஸ்ரேலிய தூதுக்குழு இஸ்ரேல் திரும்பி போர் அமைச்சரவைக்கு கடந்த சனிக்கிழமை (24) விளக்கமளித்ததாக அதிகாரிகள் மற்றும் உள்ளூர் ஊடகங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

இந்த சந்திப்புக்கு முன்னர் தொலைக்காட்சி ஒன்றுக்கு பேட்டியளித்த தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ட்சச்சி ஹனக்பி, ‘பாரிஸில் இருந்து தூதுக் குழு திரும்பியுள்ளது, உடன்பாடு ஒன்றை நோக்கிச் செல்ல சாத்தியமுள்ளது’ என்றார்.

இந்த சந்திப்பில் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை குறித்து பேசியதாக பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் பேச்சுவார்த்தை முடிவில் தொடர்ந்து பேச்சுவார்த்தையை முன்னெடுக்க அடுத்து வரும் நாட்களில் தூதுக்குழு ஒன்றை கட்டாருக்கு அனுப்ப இணக்கம் எட்டப்பட்டிருப்பதாக இஸ்ரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் காசாவில் தனது திட்டம் தொடர்பில் பாரிஸ் பேச்சுவார்த்தையில் இஸ்ரேல் தெளிவற்ற நிலையில் இருந்ததாக பலஸ்தீன அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

‘எந்த ஒரு உடன்படிக்கையும் கைதிகள் பரிமாற்ற உடன்பாடு ஒன்றுக்கான முயற்சியாகவே இஸ்ரேல் அவதானம் செலுத்தும் அதே நேரம், ஹமாஸ் எந்த ஒரு உடன்படிக்கையும் போரை முடிவுக்குக் கொண்டுவந்து காசாவில் இருந்து துருப்புகளை வாபஸ் பெறும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பை முடிவுக்கு கொண்டுவருவதை அடிப்படையாகக் கொண்டுள்ளது’ என்று அந்த அதிகாரி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். முன்னதான கடந்த நவம்பரில் ஒரு வாரம் நீடித்த போர் நிறுத்த உடன்படிக்கையின்போது 100க்கும் அதிகமான பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அதன்போது கட்டார், எகிப்து மற்றும் அமெரிக்கா மத்தியஸ்த நடவடிக்கையில் ஈடுபட்டன.

காசாவில் தொடர்ந்து பணயக்கைதிகள் பிடிக்கப்பட்டிருப்பது இஸ்ரேலுக்குள்ளும் நெதன்யாகு அரசுக்கு கடும் அழுத்தத்தை ஏற்படுத்தி வருகிறது. கடந்த சனிக்கிழமை (24) இரவும் டெல் அவிவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பணயக்கைதிகளை விடுப்பதற்கான முயற்சியில் ஈடுபட அரசுக்கு அழுத்தம் கொடுத்தனர்.

‘எப்படியாவது அவர்களை எம்மிடம் கொண்டுவரும்படி நாம் தொடர்ந்து கூறி வருகிறோம்’ என்று கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தனது சகோதரி ஹனான் கடத்தப்பட்ட நிலையில் 45 வயது அவிவிட் யப்லொங்கா தெரிவித்தார்.

டெல் அவிவில் அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்றதோடு அவர்கள் வீதிகளை மறித்து, நெதன்யாகு அரசை பதவி விலகும்படி கோசம் எழுப்பினர். அவர்களை கலைப்பதற்காக பெரும் எண்ணிக்கையான படையினர் குவிக்கப்பட்டிருந்தனர்.

‘பொருளாதாரம் அல்லது அண்டை நாடுகளுடனான அமைதியில் அவர்கள் எம்மை சரியான பாதையில் வழிநடத்தவில்லை’ என்று 54 வயது மென்பொருள் நிறுவன தலைமை நிர்வாக அதிகாரியான மோட்டி குஷர் குறிப்பிட்டார். அவர்கள் ஒருபோதும் போரை முடிக்கப் போவதில்லை என்று தெரிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

**அதிகரிக்கும் நெருக்கடி**

முற்றுகையில் உள்ள காசாவில் நான்கு மாதங்களுக்கு மேலாக உணவு பற்றாக்குறை நீடிக்கும் சூழலில், முன்னெப்போதும் இல்லாத நெருக்கடி நிலையை எதிர்கொண்டிருப்பதாக உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது. காசா பஞ்சத்தின் விளிம்பில் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை முன்னதாக எச்சரித்திருந்தது.

வடக்கு காசாவின் ஜபலியா அகதி முகாமில் உணவுகள் தீர்ந்துள்ளன. இங்கு தொடர்ந்து குண்டுகள் விழுவதால் உணவு வாகனங்கள் வர முடியாது இருப்பதோடு அப்படி வந்தாலும் இஸ்ரேலிய தரைப் படையின் தாக்குதல் அல்லது திருட்டுக்கு முகம்கொடுத்து வருகின்றன. குறிப்பாக சிறுவர்கள் பெரும் வேதனையை சந்தித்து வருகின்றனர்.

‘நாம் வளர்ந்தவர்கள் இன்னும் எம்மால் பொறுத்துக் கொள்ள முடியும், ஆனால் இந்த சிறுவர்களுக்கு நான்கு ஐந்து வயது தான் ஆகிறது, பசியுடன் தூங்குவதற்கும், பசியுடன் எழுவதற்கும் அவர்கள் என்ன தவறு செய்தார்கள்?’ என்று கோபத்தில் ஆடவர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இங்கு தங்கியுள்ள மக்கள் அழுகிய சோள குப்பைகள், மனிதன் உண்பதற்கு தகுதியற்ற விலங்குணவுகள் மற்றும் இலைகளைக் கூட உண்டு வருகின்றனர்.

காசா நகரில் மஹ்மூத் பத்தூ என்ற இரு மாதக் குழந்தை ஒன்று ஊட்டச்சத்தின்மையால் உயிரிழந்ததாக காசா சுகாதார அமைச்சு சனிக்கிழமை கூறியது.

‘காசாவுக்கான உதவிகள் செல்வதை இஸ்ரேலிய அரசு தடுக்கும் வரை பஞ்சம் ஏற்படும் அச்சுறுத்தல் தொடர்ந்து அதிகரிக்கும்’ என்று சிறுவர்களை பாதுகாப்போம் அமைப்பு எச்சரித்துள்ளது.

காசா நகரில் இருக்கும் அல் ஷிபா மருத்துவமனையில் கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் குழந்தை இறந்துள்ளது. இந்தக் குழந்தை மருத்துவமனை படுக்கையில் மூச்சுத்திணறியபடி இருக்கும் வீடியோ ஒன்றும் வெளியாகியுள்ளது.

போர் வெடித்த ஆரம்பத்தில் காசாவுக்கான உணவு, நீர் மற்றும் எரிபொருள் என அனைத்து விநியோகங்களையும் இஸ்ரேல் துண்டித்ததோடு, கடந்த டிசம்பரில் மனிதாபிமான உதவிகள் செல்வதற்கு ஒரே ஒரு எல்லையை திறந்தது. எனினும் அந்த கரம் அபூ ஷலேம் எல்லைக் நீடிக்கும் கடவையில் கடுமையான சோதனைகள் மற்றும் தீவிர வலதுசாரிகளின் ஆர்ப்பாட்டங்கள் உணவு லொறிகள் செல்வதை தடுத்து வருவதாக உதவி நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

காசாவுக்குள் உதவி விநியோகங்கள் சென்றாலும் போதிய பாதுகாப்பு இன்மை மற்றும் உதவிகளை எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் காசா பொலிஸார் மீது இஸ்ரேலிய படை தாக்குதல் நடத்துவதால் அதனை பகிர்வதில் இடையூறு நீடித்து வருகிறது.

இதில் வடக்கு காசா கடந்த ஒக்டோபர் தொடக்கம் உதவி விநியோகங்களில் இருந்து முற்றாக துண்டிக்கப்பட்டுள்ளது.

**தொடரும் தாக்குதல்**

காசாவில் இஸ்ரேலின் இடைவிடாத தாக்குதல்கள் நீடிக்கும் நிலையில் காசா நகரில் இஸ்ரேலிய போர் விமானங்கள் நேற்று நடத்திய தாக்குதலில் மூவர் கொல்லப்பட்டுள்ளனர். காசா நகரின் சேப்ரா பகுதியில் காலி குடும்பத்திற்குச் சொந்தமான குடியிருப்பின் மீதே வான் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

கான் யூனிசின் மேற்குப் பகுதில் நேற்று இடம்பெற்ற புதிய வான் மற்றும் பீரங்கி தாக்குதல்களில் மேலும் பலர் கொல்லப்பட்டிருப்பதாக அந்த செய்தி நிறுவனம் கூறியது.

கடந்த 24 மணி நேரத்தில் இடம்பெற்ற தாக்குதல்களில் காசாவில் 94இற்கும் அதிகமானவர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இதன்படி காசாவில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 29,700ஐ தாண்டியுள்ளது.

இதில் காசா மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகர் மீது சனிக்கிழமை இரவு பல வான் தாக்குதல்கள் இடம்பெற்றதாக அங்கிருப்பவர்களை மேற்கோள் காட்டி ஏ.எப்.பி. செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலின் தரைவழி தாக்குதல் அச்சுறுத்தலுக்கு மத்தியில் இந்த நகரில் பெரும் எண்ணிக்கையான மக்கள் நிரம்பி வழிகின்றனர். இஸ்ரேலிய தரைப்படை நுழையாத ஒரே நகராக ரபா உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 26ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.